மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 19 ஞாயிற்றுக்கிழமை (03.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 228

SATS-TECH ENGINEERS




NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகாது

## பிரதமர் மன்மோகன் சிங் எடுத்துரைப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு உட்பட்டுத் தீர்வு கண்டுவிட முடியாது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் எல்லையைக் கடந்து செல்ல வேண்டும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## எதிர்க்கட்சித் தலைவருக்கு 4 ஆவது வரிசையில் இடம்

(கொழும்பு)

சார்க் உச்சி மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மண்டபத்தில் 4 ஆவது வரிசையிலேயே ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற சம்பிரதாயத்திற்கு முரணான இந்த நடைமுறையை அவதானித்துக் கொண்டு முன் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தெற்காசிய நாடுகளுக்கு பயங்கரவாதம் சாபக்கேடு

## சார்க் மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

பயங்கரவாதத்தில் நல்ல பயங்கரவாதம், மோசமான பயங்கரவாதம் என்ற பிரிவுகள் இல்லை என இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 15-வது சார்க் உச்சி மாநாட்டில் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குப் பிராந்திய நாடுகள் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும் அவர் நன்றி தெரிவித்தார். கொழும்பில் நேற்றுச் சனிக்கிழமை ஆரம்பமான 15-வது சார்க் உச்சிமாநாட்டின் தலைமைப் பதவி இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டது.

இதுவரை காலமும் சார்க் நாடுகளின் தலைமைப் பதவியை வகித்து வந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், 15-வது சார்க் மாநாட்டுக்கான தலைமைப் பதவியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

இதன் பின்னர் அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய-பாகிஸ்தான் பிரதமர்கள் சந்திப்பு

(கொழும்பு)

தெற்காசியப் பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் சார்க் பிராந்திய நாடுகள் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்று இந்திய மற்றும் பாகிஸ்தான் பிரத (12 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின்
க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான
**கணக்கீடு -II பகுதி (I)**
**பொருளியல் -I**
பாட மாதிரி வினாத்தாள்.

# பிரதமர் மன்மோகன் சிங் தம்மை சந்திக்காமை கவலை தருகிறதாம்

## கருணா அம்மான் தெரிவிப்பு

(கொழும்பு)

சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்துள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைத் தமது கட்சியினர் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படாமை குறித்துத் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் கருணா அம்மான் கவலை வெளியிட்டுள்ளார்.

தமது கட்சியின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு விட யங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக மீனவர் மீதான தாக்குதல் மன்மோகன் மகிந்தவிடம் புகார்

(கொழும்பு)

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் புகார் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து தமிழக மீனவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை நடத்த இலங்கை உத்தரவிட்டிருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் நேற்று ஆரம்பமாகிய சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்காகக் கொழும்பு வந்துள்ள பிரதமர் மன்மோகன் சிங், நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசினார்.

அப்போது தமிழக (12 ஆம் பக்கம் பார்க்க)

## 10 ஆயிரம் குடும்பங்கள் கிளிநொச்சியில் தஞ்சம்

(கிளிநொச்சி)

அண்மைக் காலமாக வன்னிப் பிரதேசத்தில் படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகப் பத்தாயிரம் குடும்பங்கள் புதிதாக இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சமடைந்துள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்திருக்கின்றார்.

மன்னார் மாவட்டத்தின் மடு மற்றும் மாந்தை மேற்குப் பிரதேசங்களிலிருந்துஇடம்பெயர்ந்துள்ள 7 ஆயிரம் குடும்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்குப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளாங்குளத்தை மீட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

## வன்னியில் உக்கிர மோதல் தொடர்கிறது

(வவுனியா)

மன்னார் மாவட்டத்தின் மேற்குக் கரையோரத்தில் மன்னாரிலிருந்து பூநகரிக்குச் செல்லும் ஏ-32 வீதியில் உள்ள வெள்ளாங்குளம் பகுதியை விடுதலைப்புலிகளிடமிருந்து இராணுவத்தினர் முழுமையாகக் கைப்பற்றியிருப்பதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் அறிவித்திருக்கின்றது.

இந்த முன்னேற்றத்தின் மூலம் இராணுவத்தினர் கிளிநொச்சி மாவட்டத்தினுள் பிரவேசித்திருப்பதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் கூறியிருக்கின்றது.

இதற்கிடையில் முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளத்திற்கு மேற்கேயுள்ள மல்லாவி, துணுக்காய் பிரதேசங்களின் தென்பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற கடும் மோதல்களில் 9 விடுதலைப்புலிகளும் 11 இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

இந்தப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு மோதலில் மேலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வலம்புரியின் ஏற்பாட்டில் ஐந்தாம் தர புலமைப் பரீட்சை கருத்தரங்கு–2008




மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வடமராட்சி கல்வி வலயத்தின் வழிகாட்டலில் நேற்று நெல்லியடி வடமத்திய மகளிர் கல்லூரியிலும், உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும் இடம்பெற்றது.

இதில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராசா, மக்கள் வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராசா ஆகியோர் வழிகாட்டல் கையேடுகளை மாணவர்களுக்கு வழங்கி கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பதையும்.

ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயத்தின் வழிகாட்டலில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் யாழ்.பிராந்திய முகாமையாளர் திருமதி ஆர்.அரியநாயகம் ஆகியோர் கருத்தரங்கின் தொடக்க நிகழ்வில் பங்கேற்றிருப்பதையும் படங்களில் காணலாம்.

# ஹர்பஜன் சுழலில் பணிந்தது இலங்கை அணி; இந்தியா 237 ஓட்டங்களால் முன்னிலையில்

(கொழும்பு)

ஹர்பஜன் சிங், கும்ளேயின் சுழலில் இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 292 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 37 ஓட்டங்கள் வித்தியாசத்தால் முன்னிலையில் 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் 4 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்று இலங்கை அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில் 2-வது டெஸ்ட் கடந்த 31 ஆம் திகதி காலியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 329 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஆட்டமிழக்காமல் சேவாக் 201 ஓட்டங்களையும் காம்பீர் 56 ஓட்டங்களையும் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஜந்த மெண்டிஸ் 6 விக்கெட்டுக்களையும் சமிந்தவாஸ், முத்தையா முரளிதரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்று முன்தினம் 2ஆம் நாள் ஆட்டநேர முடிபில் 5 விக்கெட்டுக்களை இழந்து 215 ஓட்டங்களை எடுத்திருந்தது.

3ஆம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஹர்பஜன், கும்ளேயின் சுழலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 292 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 86 ஓட்டங்களையும் சங்கக்கார 68 ஓட்டங்களையும் மற்றும் வர்ணபுர 66 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 40.3 ஓவர்கள் பந்துவீசி 102 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் அனில் கும்ளே 3 விக்கெட்டுக்களையும் சகீர் கான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 37 ஓட்டங்கள் முன்னிலையில் தனது 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான காம்பீர், சேவாக் ஜோடி சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர்.

இந்த ஜோடி 90 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது சிறப்பாக ஆடிய சேவாக் 50 ஓட்டங்களை எடுத்து சமிந்தவாஸின் பந்துவீச்சில் டில்சானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் காம்பீருடன் இணைந்த ராவிட் நிதானமாக ஆட மறுமுனையில் காம்பீர் அரைச்சதம் கடந்தார். இந்திய அணி 144 ஓட்டங்களை எடுத்தபோது காம்பீர் 74 ஓட்டங்களை எடுத்த நிலையில் மெண்டிஸில் குக்குலி முறையிலான பந்துவீச்சில் நேரடியாக போல்ட் ஆகி ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 4-வது விக்கெட்டுக்காக இணைந்த ராவிட்-டெண்டுல்கர் ஜோடி ஓரளவு நம்பிக்கை அளித்தாலும் டெண்டுல்கர் 31 ஓட்டங்களை எடுத்து சமிந்தவாஸின் பந்துவீச்சில் மஹேல ஜெயவர்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து கங்குலி களமிறங்க மறுமுனையில் நீண்ட இடைவெளிக்குப் பின் சிறப்பாக ஆடிய ராவிட் 44 ஓட்டங்களை எடுத்தபோது முரளிதரனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இவ்வாட்டமிழப்புக் கோரிக்கையை நடுவர் வழங்க மறுத்தபோது 3-வது நடுவரிடம் இலங்கை அணியினர் மேன்முறையீடு செய்தனர்.

இதனை ஏற்ற 3-வது நடுவர் பென்சன் வீடியோ மீள் பார்வையில் கணித்து ராவிட் ஆட்டமிழப்பு என அறிவித்தார்.

அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்களை இழந்த இந்திய அணி நேற்றைய 3ஆம் நாள் ஆட்டநேர முடிபில் 4 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் கங்குலி, லக்ஸ்மன் இருவரும் ஓட்டமெதனையும் எடுக்காமல் களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் சமிந்தவாஸ் 2 விக்கெட்டுக்களையும் முரளி, மெண்டிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். 2-வது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் இந்திய அணி 237 ஓட்டங்களால் முன்னி லை வகிக்கிறது. 4ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# அனைத்து இன மக்களினதும் ஜனநாயகத்தை காப்பது இலங்கை அரசாங்கத்தின் கடமை

## அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதை தாம் ஏற்றுக் கொள்கின்ற போதும், ஜனநாயகத் திற்காகவும் மக்களைக் காப்பாற்றும் செயற்பாடுகளிலும் அரசாங்கம் ஈடுபட வேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தென் ஆசியப் பிராந்திய தலைவர் ரிச்சர்ட் பௌச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். 'சார்க்' மாநாட்டுக்காக இலங்கை வந்துள்ள பௌச்சர் இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை மதித்து நடக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மக்கள் ஜனநாயக ரீதியில் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் நடக்கின்ற போதும், ஜனநாயக அரசாங்கம் ஒன்று தமிழ் முஸ்லிம் உட்பட அனைத்து மக்கள் விடயத்திலும் ஒரே பொறுப்பை வெளிக்காட்ட வேண்டும் என்றும் அத்துடன் மனித உரிமைகள் விடயத்தில் உரிய பொறுப்பை கொண்டிருக்க வேண்டும் என்றும் பௌச்சர் குறிப்பிட்டார்.

யுத்தத்தை முன்கொண்டு செல்கின்ற அரசாங்கம், அரசியல் தீர்வு விடயத்திலும் அக்கறை செலுத்தவேண்டியது அவசியம் என்றும் பௌச்சர்சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசியல் தீர்வு விடயத்தில் முனைப்புக் காட்டவேண்டும் என அவர் வலியுறுத்தினார். (ஓ)

## இறுவெட்டு வெளியீட்டுவிழா

தொல்புரம் மன்னதோட்டம் ஜெகஜோதி அம்பாளின் புகழ்பாடும் ஜோதிப்பிரவாகம் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு திருமதி இராமலிங்கம் குகபூசணி தலைமையில் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக வலிமேற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பொ. சந்திரவேல்கலந்து கொள்வர் என பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.(ஓ)

## வரவேற்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமலமரித் தியாகிகள் சபையின் வட மாகாண முதல்வராக நியமிக்கப்பட்டுள்ள அருட்பணி போல் நட்சத்திரம் அடிகளாரை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு கோப்பாய் தெற்கு புனித மரியன்னை தேவாலயத்தில் இடம்பெற வுள்ளது.

திருநெல்வேலி கோப்பாய் பங்கில் உள்ள கத்தோலிக்க மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் மாகாண முதல்வரால் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (ஓ)

## கல்விக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் உள்ளூராட்சி வார விழாவினை சிறப்பிக்கும் வண்ணம் வலி மேற்கு பிரதேச சபையும் வலி மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து நடாத்தும் கல்விக் கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் வலி மேற்கு பிரதேசபை செயலாளர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் தேவஸ்தானம் ஆலய குரு ந. கமலநாத சர்மா மூளாய் தென்னிந்தியத் திருச்சபை வண. ரி.எஸ் யோசுவா ஆகியோர் ஆசியுரையை வழங்குவார் (ஓ)

## பருத்தித்துறையில் நவீன சந்தை

பருத்தித்துறை நகரசபைக்கான நவீன சந்தை அமைப்பதற்கான கேள்வி கோரப்பட்டுள்ளதாகவும் விரைவில் ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக் கப்படவுள்ள தாக அண்மையில் நடைபெற்ற பருத்தித் துறை பிரதேச செயலகத் தினால் நடாத்தப் பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பிரதேச செயலரினால் தெரிவிக்கப்பட்டது. (ஓ-35)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கட்டப் பிராய் கலைமணி சனசமூக நிலைய இல்ல விளையாட்டுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கலைமணி சனசமூக நிலையமுன்றலில் தலைவர் மு.ரவிக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விஅதிகாரி கே.வி. குணசேகரம்,சிறப்புவிருந்தினர்களாக செங்குந்தா இந்துக் கல்லூரி அதிபர் இ.பாலகுமார், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை முன்னாள் அதிபர் க. தவராசா , மரக்கூட்டுத்தாபனஓய்வு பெற்ற பிராந்திய முகாமையாளர் க.லயன் விஜயரட்ணம், இருபாலை தெற்கு கிராம அலுவலர் ஜி.ஜெயந்திரன், சமூர்த்தி அலுவலர் அ. ஜெயசிங்கம், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபாஸ் சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (ஓ-136)

## தாச்சிச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கியினதும் யாழ்ப்பாணம் வர்த்தகவங்கியின தும் ஆதரவுடன் யாழ் மாவட்டதாச்சி விளையாட்டு சங்கம் நடத்தும்13ஆவது மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 3மணி தொடக்கம் 6 மணி வரை தாவடி ஸ்ரீகாளிஅம்பாள் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற உள்ளது.

இதில் 3.30 மணிக்குமகாத்மா விளையாட்டுக் கழகம்- சாவக்காடு எதிர் ஒற்றுமை விளையாட்டுகழகம்- மயிலிட்டியும் 4.30 மணிக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்- கோண்டாவில் எதிர் இளைஞர் ஒன்றியம் விளையாட்டுக்கழகம்-மயிலிட்டியும் மோத வுள்ளன.

நாளை4.30 மணிக்கு சிந்து விளையாட்டுக் கழகம் -ஆலடி ,உடுவில் எதிர்நாவலர் விளையாட்டுக் கழகம்-சுதுமலையும் மோத வுள்ளன. (ஓ)

## ஆர்கொலோ சதுரர் நடன நாடக நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஆர் கொலொ சதுரர் நாட்டிய நாடகத்தை ஆவணப்படுத்தும் முயற்சியாக தற்போது இது நூல் உருவாக வெளிவந்திருக்கிறது. இதில் நாடக எழுத்துரு , இசைக்குறிப்புக்கள், பங்கு பற்றியோரது அனுபவங்கள், விமர்சனங்கள் அடங்கலாக ஓர் முழுமையான விபரங்கள் உள்ளடங்கியுள்ளது.

பரதத் துறைசார்ந்தோருக்கும் நடனத் துறை மாணவர்களிற்கும் நாடக அரங்கியல் மாணவர்களிற்கும் மிகவும் பயனுள்ளதாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதனுடன் ஆர் கொலோ சதுரர் நாடகத்தின் இசைப் பாடல்கள் அடங்கிய இசைத்தட்டும் இணைத்து வழங்கப்படுகிறது.

இந்நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வை குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமை தாங்கி நடத்துகிறார். இதன் வெளியீட்டு உரையை சி.திருநாவுக்கரசுவும் மதிப் பீட்டு உரையை சோ.பத்தமநாதனும் நிகழ்த்துகிறார். (ஓ)

# நாட்டிய சிறப்பியல் பார்வையில் குருவின் மேன்மைத்துவம்

ஸ்ரீ குருப்யோ நம
பிரமன்றா எம்போட, மால் படகந்தனை முழங்க
பேராம் வாணி
அருமையாம் வீணைகொள சீர்குழலி, ரவி சசியும்
அடைவா யூத
கிருபையுடன் தேவரொலி செய்ய, நந்தி மத்தளம்
சங்கீதத் தைந்தும்
புரு முழங்க ரசம்பிறக்க சிவனாடும் நடனத்தைப்
போற்று வேனே




கலைகள் தான் ஒரு சமுதாயத்தின் பண்பாடுகளை எடுத்தியம்பும்கருவி. வரிசைப் படுத் தாத இசை . கூத்து , நாடகம், வரிசைப் படுத்தப்பட்டு , வகுக்கப்பட்டு ஒரு வரையறைக்குள் கொண்டு வந்த பிறகு அது நுண் கலை ஆகிறது.நுண்கலைநிலைக்கு இசை, கூத்து நாடகம் வளர்ந்திருப்பதைப்பொறுத்துத் தான் ஒரு நாட்டின் பண்பாட்டின் உயர்வை அளவிட முடியும் எப்படியும் வாழலாம் எப்படியும் ஆடலாம் என்பது பண்பாட்டினை குறிப்பதன்று.இப்படித்தான் வாழ வேண்டும் இப்படித்தான் ஆட வேண்டும் என்பதிலே தான் உயர்வு அமைய முடியும்.

நாட்டியம் பி⁴ன்னருசே ஜனஸ்ய
ப³ஹீதா⁴ ப்யேக¹ம் சமாரத⁴ னம்

இது மஹாகவி காளிதாஸர் கூற்று . சில கலைகளை கண்ணாலே பார்க்க மட்டுமே இயலும் . சில கலைகளை காதுகளால் கேட்க மட்டுமே முடியும். ஆனால் நாட்டியக்கலையினை உலகில் மக்கள் கண்களால் பார்த்தும் செவிகளால்கேட்டும் இன்புறுவார்கள். ஞாலத்தில் மக்கள் மிக அதிகமாக நாட்டியத்தையே விரும்புகின்றனர் என்பது பொருளாகும் . உலகில் பலவிதமான செல்வங்கள் இருந்தாலும் ஆரோக்கியம் முக்கியமாக நோய் நொடிகள் இல்லாது இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதர்களுக்கும் தான் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். நல்ல சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பது இயல்பேயாகும் . ஆனால் அது எப்படி? இத்தகைய அரிதான எண்ணம் எவ்வாறு தோன்றுகிறது யோக பயிற்சியினா லும் ப்ராணயாமத்தினாலே முறையானதும் அளவானநல்ல உணவு உட்கொள்வதினாலும் மேற்படி எண்ணம் நடைமுறைப் படுத்தப்படலாம் தவறில்லை. ஆனால் அந்த அனைத்துப் பயிற்சிகளும் முறையான நாட்டிய பயிற்சியினால் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்கின்ற மனிதனின் எண்ணம் சந்தேகத்திற்கு இடமின்றி நடைபெறும்.அது மட்டுமன்றி நாட்டியப் பயிற்சியினால் கிடைக்கின்ற ஆரோக்கியம் மிகவும் புனிதமானது, உயர்ந்தது, நிலையானது என்றும் ஆன்றோர்கள் குறிப்பிடுவார்கள்.

சர்வ சாஸ்த்¹ரார்த² சம்பன்னம் சர்வ சில்ப¹ பிரவர்த்த¹கம்

நாட்டிய வேத¹ம் ததஸ்சக்ரே சதுர்வே தா³ங் க³ சம்ப⁴வம்

ரிக்வேதம், யசூர் வேதம், சாமவேதம் அதர் வவேதம் என்ற நான்கு வேதங்கள் பலவிதமான சாஸ்திரங்கள். சில்ப சாஸ்திரங்கள் இவைகளை நன்கு ஆராய்ந்து நாட்டிய வேதமென்ற ஐந்தாம் வேதத்தை பரத முனிவர் படைத்து தந்தார். நான்கு வேதங்களைப் படித்து அதனுடைய கருத்துக்களை ஆராய்ந்து தெரிந்து கொண்டு மேலும் பல சாஸ்திரங்களையும் தெரிந்து கொண்டு அறிவை வளர்ப்பது என்பது தனியொரு மனிதனால் இயலாத ஒரு காரியமாகும் .

அதனால் நமது முன்னோர்கள் பல்வேறு சாஸ்திரங்களைப் படித்து ஆராய்ந்தறிந்து அவற்றின் சாரத்தைப் பிழிந்து நமக்கு ஊட்டுவதற்காக இந்தநாட்டிய வேதத்தை உருவாக்கினார்கள் . இதை ஜாதி, மத, பேத மின்றி யார் வேண்டுமானாலும் படித்து தெரிந்து கொள்ளலாம் என்ற நல்லெண்ணத்தை எதிர்கால நடைமுறைக்கு வகுத்துத் தந்துள்ளார்கள்.இப்படி இருந்தும் இந்த இசை மற்றும் நாட்டிய சாஸ்திரத்தை அனைவரா லும்படிக்க முடியவில்லையே ???

ஒரு மனிதனுக்கு ஸ்ருதி ஞானமும் லய ஞானமும் பிறவியிலேயே இறைவனால் தரப்பட்டது.பின்னர்அந்த மனிதன் தக்க குருவிடம் சென்று அந்த ஸ்ருதி ஞானத்தையும் லய ஞானத்தையும் வளர்த்துக் கொள்கிறான் .இவ்விரு ஞானத்தையும் யாராலும் கொடுக்க முடியாததால் இசை மற்றும் நாட்டிய சாஸ்திரத்தை அனைவராலும் படிக்க முடிவதில்லை. பூர்வஜென்மத்தில் ஆன்மீகமான ஞானத்திற்காகஇறைவனுக்கு நல்ல சேவையும் பூஜையும் செய்திருந்தால் இந்த ஜென்மத்தில் இந்த கலைகளின் மேல் நமக்கு ஆர்வம் உண்டாகும் படித்து நல்ல புகழையும் பெற முடியும் . இந்தக கலையின மூலமாக தெய்வ பக்தியும் வரும். இதை பக்தி சிரத்தையோடு செய்தோமானால் இறைவனுக்கு திருப்தி உண்டாகும்.

தெய்வத்தின் அனுக்கிரம் பெற பல வழிகள் இருந்தாலும் பக்தி மார்க்கமுடன் கூடிய நாட்டிய சேவையை சிறந்த வழியாகும். இத்தகைய வழியிலேயே இறைவனும் எளிதில் திருப்தி அடைவான்.



நத்தா² க³ந்த மால்யேன தே³ வா துஷ்யந்திபூஜிதா
யத²ாநர்யப்ரயோக³ ஞ்யைதுஷ்யந்தீ ஸ்துதி மங்களை

சந்தனம், பூமாலைகளோடு நன்கு அலங்கரித்து பூஜை செய்வதனால் மட்டுமல்லாமல் மங்களகரமான ஸ்தோத்திர ப்ரயோகங்களோடு நாட்டிய பிரயோகம் செய்தால் இறைவன் மிகுந்த திருப்தி அடைவான். இதையுணர்ந்த பெரிய மஹான்கள் அனைவரும் ஸ்ரீ புரந்தர தாஸர் , ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் ஸ்ரீ நாமதேவர், ஸ்ரீ துக்கராம் , பக்த மீரா பாய் , பக்த கபீர் தாஸர் , இப்படி பல பக்தர்கள் ஆடிப்பாடி இறைவனை திருப்தி செய்து மோட்சம் அடைந்தார்கள். (தொடரும்)

திருமதி பிரஷாந்தி உதயபாபு
(அடையாறு கலாக்ஷேத்ரா)
தற்காலிக நடன விரிவுரையாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

# கமலுக்கு நாயகி நயன்தாரா ?



மர்மயோகியில் தனக்கு ஜோடியாக நடிக்க முதலில் கஜோலிடம் கேட்டிருந்த கமல், இப்போது அந்த எண்ணத்தை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டு நயனிடம் கேட்டுள்ளாராம்.

மர்மயோகியில் நடிக்கப்போவதாக மூன்று நடிகைகளின் பெயர்கள் அடிபடுகின்றன. கஜோல், ராணிமுகர்ஜி மற்றும் பத்மப்ரியா தான் அந்த மூவரும். இவர்களில் முதல் இருவரும் இந்தப் படத்தில் நடிப்பது குறித்து இதுவரை எதுவும் பேசவில்லை. ஆனால் பத்மப்ரியா மட்டும் இந்த படத்தில் நடிக்கப் போவதாகவும், கமல்ஹாசனே போனில் தன்னிடம் பேசியதாகவும் கூறி வருகிறார்.

இந்நிலையில், இன்றைக்கு தென்மாநில மொழிப் படங்களில் பரபரப்பாகப் பேசப்படும் நாயகியான நயன்தாராவிடம் மர்மயோகி படத்தில் நடிக்குமாறு உலக நாயகன் கேட்டுக்கொண்டிருப்பதாக நம்பத் தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்போது அஜித், விக்ரம், கார்த்தி, தனுஷ்... என பெரிய ஹீரோக்களின் படங்களில் பிஸியாக இருக்கும் நயன்தாரா இன்னமும் தன் பதிலைச் சொல்லவில்லையாம். எனினும் ஏகன் படப்பிடிப்பு முடிந்துவிட்டதால், கமலுக்கு திகதிகள் ஒதுக்குவதில் அவருக்கு சிரமமிருக்காது என மர்மயோகி வட்டாரம் தெரிவிக்கிறது.

ரஜினியுடன் இதுவரை 3 படங்களில் நடித்துவிட்ட நயன்தாரா, கமல்ஹாசனுடன் இன்னும் ஒரு படத்தில் கூட நடிக்கவில்லை. அந்தக் குறை இந்தப் படத்தில் தீர்ந்துவிடும் எனப் புல்லரிக்கிறார்கள் கமல் ரசிகர்கள்.

# மீராஜஸ்மினின் சிவா



ஆந்திராவில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி பெற்ற தெலுங்குப் படம். ராராஜு. இந்தப் படம், சிவா என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றம் செய்யப்படுகிறது. இது ஒரு முரடனுக்கும், ஐ. ஏ. எஸ். படித்த பெண்ணுக்கும் இடையேயான காதல் கதை.

முரடன் சிவாவைப் பார்த்து ஊரே நடுங்குகிறது. அவனை நேரில் பார்த்தால் ரௌடிகளே ஓடி ஒளிகிறார்கள் என்றால் பாருங்கள். ஐ.ஏ.எஸ். படிக்கும் ஜோதி என்ற பெண் அவனுடன் அன்பாகப் பழகுகிறாள்.

தன்னையும் ஒரு பெண் விரும்புகிறாளே என்ற சந்தோஷத்தில் அவன் அவளுக்கு பாதுகாப்புக் கொடுத்து, அவள் படிப்புக்கு உறுதுணையாக இருக்கிறான்.

ஜோதி ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றிபெற்று கலெக்டர் ஆகிறாள். நாம் இருவரும் வாழ்க்கையிலும் இணைந்தால் என்ன? என்று சிவா கேட்க... "என்னுடைய பாதுகாப்புக்குத் தான் உன்னை காதலிப்பதுபோல நடித்தேன். உண்மையில் நான் விரும்பவில்லை" என்று ஜோதி குண்டை தூக்கிப் போடுகிறாள்.

அவன் அதிர்ச்சி அடைகிறான் என்றாலும் சமாளித்துக் கொண்டு "உன் இதயத்தில் நான் இல்லாவிட்டால் பரவாயில்லை. இனிமேல் நாம் இருவரும் நண்பர்களாக இருப்போம். என்னை முரடனாக பார்த்த இந்த சமூகம் இனி மனிதனாக பார்க்கும்" என்று அவளிடம் இருந்து பிரியாவிடை பெறுகிறான்.

இதில் சிவாவாக கோபிசாந்த், ஜோதியாக மீராஜஸ்மின் நடித்துள்ளனர்.

# ஓகஸ்டில் "தாம் தூம்"



மறைந்த இயக்குநர் ஜீவாவின் கடைசிப்படம் 'தாம் தூம்'. ஜீவாவின் உதவியாளர் மணிகண்டனால் நிறைவு செய்யப்பட்ட இப்படம் ஓகஸ்டில் வெளியாகிறது. ரஷ்யாவில் அதிக காட்சிகள் படம்பிடிக்கப்பட்ட தமிழ்ப் படம் என்றபெருமை 'தாம் தூமி'ற்கு உண்டு. ஜெயம்ரவி ரஷ்யாவில் மருத்துவப் படிப்பை முடித்து ஊர் திரும்புகிறார். மெடிக்கல் கொன்பரன்ஸ் ஒன்றிற்காக அவர் மீண்டும் ரஷ்யா செல்லும்போது ஏற்படும் எதிர்பாராத நிகழ்வு அவரது வாழ்க்கையை தலைகீழாகப் புரட்டிப் போடுகிறது. அதனை எப்படி ஜெயம்ரவி எதிர்கொண்டு ஜெயிக்கிறார் என்பது தான் கதை.


ஜீவா இயக்கிய மூன்று திரைப்படங்களும் மென்மையான காதலை அடிப்படையாகக் கொண்டவை. 'தாம்தூம்' அக்ஷனுக்கு முக்கியத்துவம் உள்ளபடம்.


தாம் என்பது மென்மை யான கிராமத்து அத்தியாயத்தையும் ஜெயம் ரவி, கங்கனா ரனாவத் காதலையும் குறிக்கும். தாம்தூம் என்பது ரஷ்யா வில் நிகழும் அதிரடிக் காட்சிகள்.

லட்சுமி ராய் ரஷ்யாவில் ஜெயம்ரவிக்கு உதவி செய்பவராக வருகிறார். முக்கியமான வேடத்தில் ஜெயராம் நடித்துள்ளார். இசை ஹாரிஸ் ஜெயராஜ்.

படத்தின் தொண்ணூறு சதவீத பகுதிகளை ஜீவா ஷூட் செய்ததாகவும் மீதிக் காட்சிகளை ஜீவாவின் பாணியிலேயே எடுத்திருப்பதாகவும் கூறினார் மணிகண்டன். "தாம் தூம்" ஓகஸ்ட் பதினைந்து திரைக்கு வருகிறது.

# சினி விமர்சனம்





நட்சத்திரங்கள்:- ரஜனிகாந்த், பிரபு, பசுபதி, நயன்தாரா, மீனா, வடிவேலு, லிவிங்ஸ்டன், விஜயகுமார், மற்றும் பலர்

இசை :- பிரகாஷ்குமார்

ஒளிப்பதிவு :- அரவிந் கிருஷ்ணா

இயக்கம் :- பி.வாசு

## குசேலன்



நல்ல சினிமா விரும்பிகளுக்காகவும் தன்னால் ஒரு படம் கொடுக்க முடியும் என சூப்பர் ஸ்டார் ரஜினி நிரூபித்திருக்கும் படம் குசேலன்.

ரஜினியின் தரமான படங்கள் எனப் பட்டியல் போடுபவர்கள் தாராளமாய் இந்தப் படத்துக்கு முதலிடம் கொடுக்கலாம்.

மலையாள ரீமேக்காக இருந்தாலும், குசேலனை தன் சிறந்த படமாகச் சொல்லி மார் தட்டிக் கொள்ளலாம் இயக்குநர் பி.வாசு. இரண்டு நண்பர்களுக்கிடையிலான நட்புதான் இந்தக் கதையின் அடிநாதம். மறையூர் கிராமத்தில் ஒரு ஓட்டை சலூன் வைத்திருக்கும் நேர்மையான ஏழை பாலு (பசுபதி). அன்றாட பிழைப்புக்கே வழியில்லாமல் கஷ்டப்பட்டாலும், காதல் மனைவி ஸ்ரீதேவி (மீனா) மற்றும் மூன்று குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழ்க்கையைக் கழிக்கிறான்.

தனது பழைய சலூனைப் புதுப்பிக்க எங்கெங்கோ கடன் கேட்கிறார். அவனது நேர்மை யாருக்கும் அவனை லஞ்சம் கொடுக்க விடாமல் தடுக்கிறது. அதன் விளைவு எந்த அரசு வங்கியிலும் கடன் கொடுக்க மறுக்கிறார்கள்.

ஆனால் அவரிடம் உதவியாளராக இருந்த சலூன் சண்முகம் (வடிவேலு), நடைமுறையைப் புரிந்து தகிடுதத்தம் செய்து பெரிய நவீன சலூனைத் திறந்து ஏராளமாய் சம்பாதிக்கிறார்.



ஒருநாள் அந்தக் கிராமத்தின் இயல்பே தலைகீழாக மாறிப் போகிறது. காரணம் நாடே போற்றும் சூப்பர்ஸ்டார் அசோக்குமார் (ரஜினி) அந்த ஊருக்கு படப்பிடிப்புக்காக வருகிறார். இதனால் கிராமத்திலுள்ள பலருக்கும் வேலை கிடைக்கிறது. எல்லோர் கையிலும் பணம் புரள ஆரம்பிக்கிறது. அப்போதுதான் சலூன் பாலு, சூப்பர் ஸ்டார் அசோக்குமாரின் நெருங்கிய நண்பன் என்ற உண்மை கிராமத்தினர் மத்தியில் கசிகிறது.

இதையடுத்து பாலுவை, ஊரே கொண்டாடத் துவங்குகிறது. ஊரே சூப்பர்ஸ்டாரை தரிசிக்க அவரது கெஸ்ட் ஹவுஸ் முன் தவம்கிடக்கிறது. ஆனால், தன்பழைய நண்பன் தன்னை இன்னுமா ஞாபகம் வைத்திருக்கப் போகிறான் என்ற அவநம்பிக்கையில் அவரைப் பார்க்கப் போகாமல் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறார் பாலு.

நிர்ப்பந்தம் காரணமாக ஒருமுறை பார்க்கப் போக, அங்குள்ள கடும்காவல் அவரை மௌனமாய் திரும்ப வைக்கிறது. ஷூட்டிங் முடிந்து அசோக்குமார் ஊரைவிட்டுக் கிளம்பும் கடைசிநாள் ஒரு பள்ளியின் விழாவில் கலந்து கொள்கிறார். அந்த விழாவுக்கு நீண்ட தயக்கத்துக்குப் பின் மனைவியுடன் புறப்படுகிறார் பாலு.

அடுத்த சில நிமிடங்களில் யாருமே எதிர்பார்க்காத உணர்ச்சிப் பிரவாகமான காட்சிகள் அரங்கேற, விழாநடக்கும் பள்ளியே உருகி உறைந்துபோகிறது. இரு நண்பர்களும் எப்படிச் சேர்ந்தார்கள் என்பது இறுதிக் காட்சி.

படத்தின் ஆரம்பத்தில் ரஜினியின் ஆவேச ரசிகர்களாய் உள்ளே நுழையும் அத்தனை பேரும் ஒரு வித நெகிழ்வுடன் வெளியேறும் காட்சியை ரொம்ப நாளைக்குப் பிறகு குசேலனில் பார்க்கலாம்.

"மாதா, பிதா, குரு, நல்ல நண்பன், தெய்வம் - இதுதான் இன்றைய இளைஞர்களுக்கு நான் சொல்லும் புதிய மந்திரம்" எனும் ரஜினி, தனது வாழ்க்கைக்கு விளக்கேற்றிய நண்பனைப் பற்றிச் சொல்லும் காட்சி இன்றைய இளைஞர்களுக்கு ஒரு சரியான பாடம்

கிளைமாக்ஸுக்கு முந்திய பள்ளி விழாவில் கலங்கிய விழிகளுடன் ரஜினி தன் நண்பனை நினைவுகூரும்போது கல்லும் கரையும். பசுபதி...இந்தப் பாத்திரத்துக்கென்றே வார்க்கப் பட்டவர் போல அப்படியொரு கச்சிதம். "அந்தப் பெரிய நடிகர் வந்தால் என் தூக்கம் போச்சு. அந்த விளக்கை அணைச்சிடு... அதுவாவது நிம்மதியா தூங்கட்டும்" என்று அவர் மனைவியுடன் பேசும்போது தம்மை மறந்து கைதட்டுகிறார்கள் ரசிகர்கள்.

நயன்தாராவுக்கு ஒருவேலையும் கிடையாது. இருபாடல் காட்சிகளில் வந்து போகிறார். மீனாவும் தன்பங்குக்கு சிறப்பாகச் செய்திருக்கிறார். படத்தில் பின்னி எடுக்கும் இன்னொரு கேரக்டர் வடிவேலு. வாவ்... வடிவேலுக்குள் எத்தனை பெரிய, அரிய நகைச்சுவைக் கலைஞர்..? பிரமிக்க வைக்கிறார். வாசுவின் படத்துக்கே உரிய ஏராளமான நட்சத்திர பட்டாளம் இதிலும் உண்டு. அரவிந்த்கிருஷ்ணாவின் ஒளிப்பதிவு படத்துக்குப் பெரும் பலம். பிரகாஷ்குமாரின் இசையும் குறைசொல்லும்படி இல்லை. பேரின்பப் பேச்சுக்காரன்... போக்கிரி ராஜா... பாடல்கள் அருமை!

குசேலன் - கதை தரத்தில் குபேரன்!

# தசாவதாரம் - பாரதிராஜா கடும் விமர்சனம்!!



பொழுது போக்கா கதை எழுதிக் கிட்டிருந்தவங்க முழு நேர இயக்குநராக மாறினா எப்படி இருக்கும் ? தசாவதாரம் மாதிரித்தான் இருக்கும்.

கதையே இல்லாம வெறும் தொழில்நுட்பத்தைக் காட்டி மக்களை ஒரு வித மயக்கத்தில் ஆழ்த்துவதைத்தான் இப்போதெல்லாம் சினிமா என்கிறார்கள் என்று விமர்சித்துள்ளார் இயக்குநர் பாரதிராஜா. திருச்சூரில் ஒரு நிகழ்சியில் பங்கேற்ற பாரதிராஜா நிருபர்களிடம் கூறியதாவது, இன்றைக்கு தமிழ் மற்றும் மலையாள சினிமாவில் நல்ல கதைகளுக்குத்தான் பஞ்சமாக உள்ளது. எக்கச்சக்கமான இயக்குநர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் கதை கிடையாது இரண்டு மொழி திரையுலகிலும் இது தான் நிலைமை.

கதையை விட்டு விடுகிறார்கள். தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றும் கலையைச் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

12ஆம் நூற்றாண்டில் பெருமாளைக் கடலில் தள்ளிய நிகழ்ச்சிக்கும் 21ஆம் நூற்றாண்டில் சுனாமி வந்ததற்கும் என்னய்யா சம்பந்தம் என்று கேட்டால் பட்டர் பிளை எபெக்ட் எனக் காரணம் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நான் கமலை திட்டுவதாக எண்ண வேண்டாம். இந்த விமர்சனத்தை அவரிடம் நேரடியாகவே சொன்னவன் நான். அந்ததுணிச்சல் எனக்கிருக்கிறது.

இப்படி ஒரு நிலை தோன்றக் காரணம் சினிமா என்பது இயக்குநர்களின் பிடியிலிருந்து நழுவிவிட்டதுதான் என்றார் பாரதிராஜா.

உங்கள் சினிமாவில் குறைகள் இருக்கத்தான் செய்கின்றன ? என்ற ஒரு நிருபரின் கேள்விக்கு நான் மக்களைப் பற்றி, அவர்களின் வாழ்க்கையைப் பற்றி, காதலும் இசையும் கலந்த வாழ்க்கையைப் பற்றிப் படமெடுத்தவன்.

ஒரு சராசரி மனிதனிடம் உள்ளசாதாரண குறைகள் அந்தப் படங்களில் இருப்பது தான் அந்தக் கதைகளுக்கு அழகு. இல்லாவிட்டால் அவை யதார்த்தத்தை மீறியதாகி விடும் என்றார் பாரதிராஜா.

# பிரியதர்ஷன் படத்திலிருந்து அசின் நீக்கம்!



பிரியதர்ஷன் இயக்கத்தில் அக்ஷய் குமார் ஜோடியாக நடிக்க விருந்த அசின் திடீரென்று நீக்கப்பட்டுள்ளார்.

அமீர்கானுடன் கிட்டத்தட்ட 2ஆண்டுகளுக்குமேல் கஜினி இந்திப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார் அசின். வரும் அக்டோபர் மாதம் தான் இந்தப் படம் வெளியாகிறது.


இதற்கிடையே பிரபல இயக்குநர் பிரியதர்ஷன் இயக்கும் புதிய இந்திப் படமான அய்சே கோ தய்சா எனும் புதிய படத்தில் அக்ஷய் குமாருக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியிருந்தார்அசின்.

ஆனால், தனக்கு விளம்பரப் படங்களில் நடிக்க வேண்டியிருப்பதாலும் கஜினி படத்தின் பிஸியாலும் உடனடியாக படப்பிடிப்பில் கலந்து கொள்ள முடியாது என்று கூறியிருந்தாராம். ஆனால் அப்படியெல்லாம் காத்திருக்க முடியாது எனக் கூறிவிட்ட பிரியதர்ஷன், அந்தப் படத்திலிருந்தே, அசினை தூக்கிவிட்டார்.




ராஜ்ரி.வி. சார்பில் முத்துலட்சுமி மூவிஸ் தயாரிக்கும் திரைப்படம் "மகனே! என மருமகனே !". இந்தப் படத்தில் ராகவ் மற்றும் விவேக் கதாநாயகர்களாக நடிக்கிறார்கள். இவர்களுக்கு தேன்மொழி, யாமினி ஷர்மா ஆகியோர் ஜோடியாக நடிக்கிறார்கள். இதில் யாமினி ஷர்மா ஏற்கனவே இந்திரலோகத்தில் நா. அழகப்பன் என்ற படத்தில வடிவேலுக்கு ஜோடியாக நடித்திருக்கிறார். இவர்களுடன் நாசர், சரண்யா, மீனாள் மற்றும் டி.பி.கஜேந்திரன் ஆகியோரும் நடிக்கிறார்கள். நாசர் சரண்யா தம்பதிகளின் மகனான ராகவ்வும், மருமகனான விவேக்கும் சேர்ந்து அடிக்கும் லூட்டி தான் படத்தில் கதையாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 56



### இலங்கையில் நடந்த எதிர்க்கிளர்ச்சி

வற்றாத வளங்கொழிக்கும் கண்டி நாட்டுக்குப் போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டமையாலும் தோட்டங்கள் அமைக்கப்பட்டமையாலும் கரைநாட்டுச் சிங்களவர் பெருந்தொகையாக அங்கே குடியேறுவாராயினர். வெள்ளைக்காரர் தங்கள் பணத்தைத் தோட்டங்களில் முதலீடு செய்வதற்காக அங்கே சென்றார்கள். தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியத் தமிழர் பெருந்தொகையினராக அங்கே குடியேறு வாராயினர். வியாபார வசதிகளை உண்டாக்கு வதற்காக முஸ்லிம்கள் அங்கே சென்றார்கள். அவர்கள் ஆங்கிலேயர் கண்டியைப் பிடித்துக் கொள்வதற்கு இன்றியமையாத உதவி யையும் செய்து கொடுத்தமையால் ஆங்கிலேயர் அவர்களுக்குச் சலுகையளித்தனர் போலும். உத்தியோகங் காரணமாகவும் வியாபாரங் காரணமாகவும் தமிழர் அங்கே குடியேறினார்கள். இங்ஙனமாக மலை நாட்டுப் பிரதேசங்கள் பல்வேறு தரப்பட்ட மக்கள் வசிப்பிடமாக மாறுவனவாயின.

தோட்டங்கள் ஏற்பட்டமையால் கண்டி நாட்டில் முன்னர் நிலவிய கிராம வாழ்க்கையும் எளிய வாழ்க்கை முறையும் நீங்கியது. பணப்பழக்கமும் தவறணைகளும் அதிகமாகவே அங்கு சென்றுறைந்தவர் வாழ்க்கை முறைகளும் சீரில்லாதிருந்தன. ஆங்கிலேயர் கோப்பி, தேயிலை, றப்பர் முதலியவிலைப் பயிர்களை நட்டுப் பொருள் தேடியதால் மலைவளத்தின் அழகு கெட்டுவிட்டதென்று மலைவாழ்வோர் முன்னர் சாமி, தினை, கேழ்வரகு, தனிப்பாலில் சமைத்துத் தேன் கலந்து விருந்து கொடுத்துத் தாமும் உண்ட முறையும், பூமிவிளை வள்ளி மரவள்ளியெனும் கிழங்கைப் பூப்போலத் தாமவித்து தின்றமுறையும் நீங்கிவிட்டன எனவும் வருந்தினர். அவர்கள் வருத்தத்தைப் படம்பிடித்து காட்டுவது போலப் பிற்காலத்தில் மாத்தளைக் குறவஞ்சி பாடிய பாவலர் பாடியுள்ளார்.

"ஆங்கிலரென் றெங்கிருந்தோ
வந்தவொரு சாதி
அந்த மலை அழகுகெடத்
தேயிலையை நட்டார்
பாங்கு நிலை மலைவளமும்
பழுதுபட லாச்சு
பண்டிருந்த புதியவளம்
பறந்தோடிப் போச்சு
ஆங்குவொரு மாரியம்மை
அவளிருப்பு தாலே
அந்தமலை மீதுமழை
வந்திறங்கு தையா
நாங்களுறை அழகுமலை
நல்லமலை யையா
நாகரிகங் கொள்வதில்லை
எவ்வரினு மையா"

### மீள் பார்வை

கண்டிப் பொதுமக்களுக்குச் சட்டசபை என்றால் என்ன என்றே தெரியாதிருந்தது. அதில் கண்டியருக்குப் பிரதிநிதிகள் நியமனம் பெறவேயில்லை. அரசாங்கத்துக்கும் கண்டியர் நிலைமை இன்னதுதான் என்பது உண்மையாகத் தெரியவில்லை. அரசாங்கம் நீல ஏடு என்னும் நானாவித விபரப் புத்தகம் தயாரிப்பதற்குப் பொதுமக்களிடம் கேள்விகளுக்கு தகவல் கேட்டது அம் 30கேள்விகளையும் மேலும் 30 வரிக ளை விதிப்பதற்காகவே அரசாங்கம் வினாவுகிறது எனப் பொதுமக்கள் கருதினர். அவர்கள் ஏற்கனவே வீதிவரி, துவக்குவரி, நாய்வரி, வத்தைவரி எனப்பல வரிகளோடு போராடி வந்தவர்களாதலால் இவ் வினாக்கள் அவர்களை அவ்வாறு சந்தேகிக்கச் செய்தன.

இந்த வேளையிலேதான் ஒப்சேவர் பத்திரிகை 3.7.1848 இல் அரசாங்கத்தின் போக்கை வன்மையாகக் கண்டித்தது.' "இத்தகைய அநீதியான வரிகளை மக்கள் எதிர்ப்பதுமல்லாமல், சட்டசபையில் பொது மக்கள் பிரதிநிதிகளான உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் சமத்துவபலம் உள்ளவராயமரவும் பொதுமக்கள் கோரிக்கை செய்து கிளர்ச்சி செய்தலும் வேண்டும்" என எழுதியது. இதையொட்டிப் போலும் கண்டி வாசிகள் 4000 மக்கள் அரசாங்க அதிபரைக்காண அணிவகுத்துப் போனார்கள். அரசாங்கம் படைகளை ஏவி அவர்களைக் கலைத்து விட்டது. புத்திசாலியான எமர்சன் ரெனன்ற் என்ற குடியேற்றக்காரியதரிசி கண்டிப் பிரமுகர்களைக் கண்டு மக்கள் குறையை நீக்குவதாக வாக்களித்து நிலைமையைச் சமாளித்தார்.

பொறளையிலிருந்து 26.7.1848 இல் 5000 பொதுமக்கள் கொழும்புக்கோட் டையை நோக்கிப் போனார்கள். அவர்களைக் கிறிஸ்தபர் எலியட் என்ற பெரியார் சமாதானங் கூறிச் சாந்தப்படுத்தித் தாம் அவர்கள் குறைகளை நீக்க வழி செய்வதாகக் கூறினார். மக்களிடம் கையொப்பம் சேர்த்துக் குடியேற்ற மந்திரியாருக்குஎலியட்எல்லாவிபரங்களையும்முறையாக எழுதினார். அதன் பயனாகவே மிகக்கடுமையான வரிகள் நீக்கப்பட்டன. ஆள்பதி ரொறிங்ரன் திருப்பி அழைக்கப்பட்டார். குடியேற்றக் காரியதரிசியாய எமர்சன் ரெனன்ற் வேறிடத் துக்கு மாற்றப்பட்டார். இவ்வாறு எலியட் செய்த முயற்சிக்கு அவருக்கு அருந்துணையாய் இருந்தவர் பெர்குசனும் லோறன்சும் என்பது கவனிக்கத்தக்கது. அது நிற்க.

கொழும்பு, கண்டி, மாத்தளை ஆகிய இடங்களில் பொதுமக்கள் கொதித்தெழுந்து ஆரவாரித்தார்கள். மாத்தளை வாசிகள் தமது எதிர்ப்பை வேறுவழியில் காட்டினார்கள். வெள்ளைக்காரரை அடியோடு இலங்கையை விட்டு அகற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு மாத்தளையில் ஆரம்பித்த கலகத்தின் தலைவர் புறான் அப்பு என்பவராவர். அவரு

**க.சி.குலரத்தினம்**

டைய முழுப்பெயர் வீரசன்னத்தக்கே பிரான்சிஸ்கோ பர்ணாந்து என்பதாம். மொறட்டுவ பகுதியிலுள்ள உயன என்ற ஊரில் 7.11.1812 இல் மதிப்புக்குரிய குடும்பத்தில் அவர் பிறந்தார். அவருடைய பெற்றோரின் குடும்பங்கள் வீரர் பலரை ஈன்ற பெருமையுள்ளவை. அவருடைய தகப்பனார் பெயர் வீரபால ஜயசூரிய குருத் தம்பால அத்ததேவ குணரத் தின என்றும் அவர் தாயார் பெயர் வர்ண மன்ன திசநாயக சபரமது நாணயக்கார லட்சாபதி என்றும் அறியத் தருவர்.

(தொடரும்)







மக்கள் வங்கியின் 47ஆவது ஆண்டுவிழாவையொட்டி பருத்தித்துறை மக்கள் வங்கியில் இடம்பெற்ற சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையை சித்தரிக்கும் ஓவிய நூல்கள் கண்காட்சியை பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும், விருந்தினர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

# 19 ஆம் நூற்றாண்டு 8

# ஈழத்துத் தமிழ் இலக்கியம்



இக்குழுவுக்குத் தலைமை தாங்கிய வண.நைற் 1838இல் காலமானர். அவரைத் தொடர்ந்து லெவிஸ்பால்டிங் தலைமையேற்று அகராதிப் பணியைத் தொடர்ந்து முன்னெடுத்து 1842 இல் தமிழ் அகராதியொன்றினை வெளியிட்டார். இவ்வகராதியின் இரண்டாம் பதிப்பு 1852 இல் மானிப்பாயில் அச்சிடப்பட்டது. இத்தமிழ் அகராதி பற்றி எஸ் ஜெபநேசன் பின்வருமாறு குறிப்பிடுவார்.

" *அவர் ( நைற்)சேகரித்த விடயங்களை ஆதாரமாகக் கொண்டு அமெரிக்க மிஷனைச் சேர்ந்த வண.லெவிஸ்பால்டிங் என்பார் சந்திசேகர பண்டிதர், வண.ஹற் சிங் ஆகியோரின் உதவியுடன் 1842இல் ஒரு தமிழ் அகராயை வெளியிட்டனர். இத்தகைய அகராதி 5800 சொற்களையுடையது. தமிழிலும் ஆங்கிலத்திலும் சொற்களுக்கு விளக்கம் கொடுத்தது. பிற்காலத்தில் இது யாழ்ப்பாண அகராதி, மானிப்பாய் அகராதி என்றும் அழைக்கப்பட்டது. ஈழத்திலே எழுந்த முதலாவது தமிழ் அகராதி இதுவேயாகும்.*

இவ்வகராதியிலே சொற்களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கம் கொடுத்தமை இதன் பயன்பாட்டின் பரப்பினைத் தெளிவு படுத்துகின்றது. ஆங்கிலம் மட்டும் அறிந்தவர்களுக்கும் தமிழ் அகராதி நன்கு பயன்படும் பொருட்டு இத்தகைய விளக்கம் கொடுக்கப்பட்டதெனக் கருதலாம் இதனைத் தொடர்ந்து நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை தொகுத்த English and Tamil Dictionary 1858 இல் சென்னையில் வெளியானது.

தமிழ் அகராதியைத் தொடர்ந்து தமிழ் ஆங்கில அகராதி என்று மைரன் உவின்சிலோ அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1862இல் வெளியானது. இவ்வகராதி ஆக்கும் பணியில் மைரன் உவின்சிலோவுக்கு உதவியாகப் பீற்றர் பேர்சிவல், கறோல் விஸ்வநாதபிள்ளை, நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை முதலியார் பணியாற்றினர். 67,452 சொற்களைக் கொண்ட இவ்வகராதி 960 பக்கங்களில் அச்சிடப்பட்டது. மைரன் உவின்சிலோ இவ்வகராதியைத் தமிழகத்திற்குக் கொண்டு சென்று அக்காலத்தில் புகழ்பெற்ற தமிழறிஞர்களாக விளங்கிய வீராசாமிச் செட்டியார், விசாகப் பெருமாளையர், இராமனுஜக் கவிராயர் முதலியாரின் ஆலோசனைகளையும் திருத்தங்களையும் பெற்றுக்கொண்டார் என்று அறிய முடிகிறது .இவ்வகராதி இன்றும் உவின்சிலோ அகராதியென்றே அழைக்கப்படுகின்றது. இவ்வகராதியின் அமைப்பும் விளக்கமும் பிற்காலத் தோன்றிய அகராதிகளுக்கெல்லாம் முன் மாதிரியாக விளங்கியதென்பர். இதனைத் தொடர்ந்து விசுவநாதப் பிள்ளையின் தமிழ் ஆங்கில அகராதியொன்று 1870ஆம் ஆண்டிலே வெளி வந்தது.

அகராதிகளின் தேவையையும் பயன்பாட்டையும் நன்குணர்ந்த ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் தனித்தும் குழுவாகவும் அகராதி ஆக்கும் பணிகளில் ஈடுபட்டனர். உவைமன் கதிரைவேற்பிள்ளை, சுன்னாகம் அ.குமார சுவாமிப் புலவர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, நா.கதிரைவேற்பிள்ளை முதலியோர் அகராதி ஆக்கும் பணிகளில் ஈடுபட்டனர். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பித்த இவர்களது அகராதி முயற்சிகள் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே நிறைவுற்றன.

19 ஆம் நூற்றாண்டிலே ஈழத்தில் நடைபெற்ற அகராதி முயற்சிகளில் மிஷனரிமாரோடு ஆங்கிலமும் தமிழும் கற்ற அறிஞர்கள் மாத்திரமன்றி மரபு வழியிலே தமிழையும் வடமொழியையும் கற்றுத் தேர்ந்த அறிஞர்களும் சேர்ந்து பணிபுரிந்துள்ளனர். இவ்வாறு பணிபுரிந்தமையால் மரபு வழித் தமிழறிஞர்களின் பார்வை விசாலமடைந்ததெனலாம். உவைமன் கதிரை வேறபிள்ளையின் அகராதி முயற்சிகளுக்கு உதவிய சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் பின்னர் தாமாக இலக்கியச் சொல்லகராதியொன்றினை வெளியிட்டார். தமிழுக்குப் புதுவிதமான அகராதித்துறைக்கு மரபுவழித் தமிழறிஞர்களும் பிரவேசிக்கப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கியச் செல்நெறியே காரணமாயிற்று எனத் துணிந்து கூறலாம்.

### மொழிபெயர்ப்பு

ஈழத்திலே 19 ஆம் நூற்றாண்டில் மொழி பெயர்ப்பு முயற்சிகளும் சிறந்த முறையிலே நடைபெற்றுள்ளன. தமிழ்மொழியில் உள்ளவற்றை ஆங்கிலத்திற்கும் ஆங்கிலத்தில் உள்ளவற்றைத் தமிழுக்கும் மொழிபெயர்ப்பது அக்காலக் கல்விமுறை தந்த காலத் தேவை எனலாம். தமிழிலுள்ள நூல்கள் சிலவற்றை, சிறப்பாக நீதிநூல்களையும் சைவ சமயச் சார்பான நூல்களையும் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கும் முயற்சியில மிஷனரிமார் அதிக ஆர்வம் காட்டினர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, கல்வி ஒழுக்கம், திருக்குறளின் சில பகுதிகள் முதலானவற்றை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்துள்ளனர். எச்.ஆர்.ஹெய்சிங்டன்

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

என்பவர் 1854 இல் தத்துவக்கட்டளை, சிவஞானபோதம், சிவப்பிரகாசம் என்பவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஹெய்சிங்டனின் சிவஞானபோத மொழிபெயர்ப்பை 1979 ஆம் ஆண்டு தருமபுர ஆதீனம் மறுபிரசுரஞ் செய்தமை விதந்து குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

21 T I

# கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை – 2008 ஆகஸ்ட்

**பொருளியல்- I மாதிரி வினாத்தாள் பகுதி I**

1 மணித்தியாலம்

தொகுப்பாசிரியர்: J.தயாபரன் B.A (Hons) Econ, Dip in Edu

(06) I.பின்வரும் ஒவ்வொரு நடவடிக்கையும் நடப்பாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை எவ்வாறு பாதிக்கும் என கூறுக?

அ) ஏற்கனவே உற்பத்திக்கு பாவிக்கப்பட்ட 5,00,000/- பெறுமானமுள்ள இயந்திரத் தொகுதி யொன்று மீளவும் விற்கப்பட்டது?

ஆ) சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 Billion Rupees நிதியுதவியில் வீடுகள் கட்டிக்கொர்டுக்கப்படல்

இ) Coco-Cola நிறுவனத்தின் போட்டியில் பங்கு கொண்ட ஒரு நபர் ரூபா 3,00,000/- பெறுமதியான வெளிநாட்டுச் சுற்றுலாவை பெற்றுக் கொண்டமை.

ஈ) ஓர் ஆசிரியர் தனது மகனுக்கு வீட்டில் கற்பித்தல்

உ) யுத்தத்தினால் குடியிருப்புத் தொகுதி அழிவடைதல்.

ஊ) மகிந்த சிந்தனையின் கீழ் 200 ஆடைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படல்

(09புள்ளிகள்)

(II)

| | |
|---|---|
| வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் | 200 |
| தனி நுகர்வு | 2000 |
| அரசு பொருட்கள் சேவைகள் கொள்வனவு | 3500 |
| வருமான இலாப வரி | 500 |
| தேறிய ஏற்றுமதி | 800 |
| மூலதன நுகர்ச்சி | 120 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | 750 |
| இருப்பு மாற்றம் | 500 |
| நேரில் வரி | 100 |
| அரச காப்புறுதி | 50 |
| வட்டிக் கொடுப்பனவு | 150 |

காண்க.

1.மொத்த உள்நாட்டு உற்பத்திச் செலவு
2.மொத்தத் தேசிய செலவு
3.தேசிய சேமிப்பு
4.செலவிடத்தக்க வருமானம் (6புள்ளிகள்)

(07) அ) உற்பத்தி தொடர்பான நேர்க்கணிய, எதிர்கணிய வெளிவாரி விளைவுகளினை உதாரணத்துடன் விளக்குக?

ஆ) பொருத்தமான வரைபடங்களினை பயன்படுத்தி அவற்றின் போக்கினைக் காட்டுக?

இ) வெளிவாரி விளைவுகளினைச் சீரமைப்படுத்தும் நடவடிக்கைகள் கூறுக?

ஈ) அண்மைக்காலத்தில் அரசு வெளிவாரி விளைவுகளின் நீக்க எடுக்கும் நடவடிக்கை பற்றிய உமது கருத்திற் கூறுக?

(08) அ) அண்மை ஆண்டுகளில் இறைமுகாமைத்துவத்தில் அரசு எதிர்நோக்கும் முக்கிய சவால்கள் எவை?

ஆ) அச்சவால்களை வெற்றிகரமாக எதிர் நோக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முன் மொழிவுகள் யாவை?

இ) 2006 – 2016 பத்தாண்டு அபிவிருத்தி கட்டமைப்பில் மேற் கொள்ளப்பட்டதிட்டங்கள் எவை?

ஈ) மொத்தமீண்டெழும் செலவீனம் 2007 இன் வரவு செலவுத்திட்ட இலக்கை விஞ்சி 14 சதவீத அதிகரிப்பொன்றினை காட்டியுள்ளது. இதற்கு பங்களிப்புச் செய்த காரணிகளை ஆராய்க?

**பொருளியல II பகுதிII 3 மணித்தியாலம்**

## பகுதி I

(01) பணத்தின் திரவத் தேர்வு என்பதனால் விளங்குவது
1. பணம் பரிமாற்றூடகமாகத் தொழிற்படல்
2. மத்திய வங்கி, வணிகவங்கிகளுக்கு வங்கி ஒதுக்கு் வீதத்தினை பேணுமாறு வேண்டல்
3. பணத்தின் பாவித்தலினால் நுகர்வோர் பெற்றுக் கொள்ளும் வழிவந்த பயன்பாடு
4. பணமானது 100% திரவத்தன்மையை கொண்டிருப்பது
5. மக்கள் பணத்தினை பணமாக வைத்திருப்பதற்கான கேள்வி

(02) காசு நிலுவைக் கோட்பாட்டினை பிரதிபலிக்கும் சமன்பாடு

..............................................................................

(03) பின்வரும் கூற்றுகளில் சரியானது
1. வட்டி வீதம் பூச்சிய மட்டத்திற்குச் செல்லும் போது பணத்தின் உத்தேசநோக்கை நோக்கி கேள்வி முடிவிலி ஆகும்.
2. வணிக வருமானங்களின் பிரதான தொழிற்பாடு நிதித்தரகர் வேலையை வினைத்திறனுடன் மேற்கொள்ளுதல்
3. மத்திய வங்கி அரசாங்கத்தின் வங்கி என்பது அரசின் அரசியல் கொள்கைக் கேற்ப நிதி ஒத்துழைப்புச் செய்தல்.
4. திறைசேரி முறிகள் மத்திய வங்கியினால் வெளியிடப்படும் சிறப்பு மிகு குறுங்கால நிதி ஆவணங்கள் ஆகும்.
5. மத்திய வங்கி 1950 இல் நாணயச்சட்டம் 58ஆம் பிரிவின் அடிப்படையில் நாணய வெளியீட்டினை மேற்கொள்ளுகின்றது.

(04) இலங்கையின் பணவீக்கத்தில் ஓர் அதிகரித்த போக்கு நிலவுகிறது. அதன்படி அண்மைக் காலத்தில் சுமார் 28.5% ஆக காணப்படுகிறது. இப் பண வீக்கத்தினை கூறும் சரியான பிரயோகம்
1. மையப் பணவீக்கம் 2. பாயும் பணவீக்கம் 3. ஓடும் பணவீக்கம்
4. நடக்கும் பணவீக்கம் 5. பறக்கும் பணவீக்கம்

(05) மத்திய வங்கியின் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பது சந்தையில் திரவத்தன்மை ................. இருக்குமாயின் அதனை சீரமைக்கும் பொருட்டு அதற்கான ஏலங்களை நடாத்தும்?

(06) A என்ற வணிக வங்கி ரூபா 10,000/- கேள்வி வைப்புகளினை ஆரம்ப வைப்பாகக் கொண்டுள்ளது. இது 10% சட்டப்படியான ஒதுக்குத் தேவையினைக் கொண்டுள்ளது. வங்கி முறைமை முழுமையாகச் செயற்படுகையில் மொத்த கடனாக்கம் எவ்வளவு?
1. 50,000/- 2. 10,000/- 3. 100000/- 4. 1000000/- 5.20,000/-

(07) மேற்குறிப்பிட்ட தகவல்களினை அடிப்படையாகக் கொண்டு இவ்வங்கி புதிதாக உருவாக்கப்படும் வைப்பின் அளவு யாது?
1. 9900/- 2. 9000/- 3. 9100/- 4. 1000/- 5. 100/-

(08) யப்பான் ஜென் ஒன்றிற்கான இலங்கை நாணய மாற்று வீதம்
2000 ஆண்டில் 1 ஜென் = 0.70 ஆக இருந்து
2007ஆண்டில் 1ஜென் = 0.94 ஆக காணப்படுகின்றது. இத்தரவுகளிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது
1. யப்பானுக்கு எதிராக இலங்கை நாணயப்பெறுமதி அதிகரித்துள்ளது.
2. இலங்கை தளம்பும் நாணய மாற்று வீதத்தினை கொண்டுள்ளது.
3. யப்பானின் நாணயம் இலங்கையுடன் ஒப்பிடும் போது பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.
4. யப்பான் நாணயம் மிகைப் பெறுமதி கொண்டுள்ளது.
5. யப்பான் நாட்டின் நாணயத்திற்கு எதிராக இலங்கை பெறுமதி தேய்வடைந்துள்ளது.

(09) காகிதத் தங்கம் என அழைக்கப்படுவது
1. IMF இன் நாணயம் 2. தங்கக் காசு
3. தாள் ஸ்ரேலிங் பவுண் 4. யூரோ நாணயம் 5. சிறப்பு எடுப்பனவு உரிமை

(10) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கணிப்பீட்டிலிருந்து புதிய கொழும்பு நுகர்வோன் விலைச் சுட்டெண் கணிப்பீட்டின் போது நீக்கப்பட்ட ஒரு பண்டத் தொகுதி
1. தளபாடம், வீட்டு உபகரணம், வீட்டுப்பராமரிப்பு
2. வெறியக் குடிவகைகள், புகையிலை, போதைப் பொருட்கள்
3. புடவைகள் மற்றும் பாதணிகள்
4. பொழுது போக்கு மற்றும் கலாசாரங்கள்.
5. வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, எரிபொருட்கள்

(11) அவலநிலைச் சுட்டெண் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படுபவை

..............................................................................

(12) இரு நாடுகள், இரு பொருட்கள் என்ற நிபந்தனையில் சர்வதேச வர்த்தகத்தில் ஒப்பீட்டு நன்மை என்பதனால் கருதப்படுவது
1. இரு நாடும் சம அமையச் செலவில் உற்பத்தி செய்தல்
2. ஒரு நாடு தனது இரு பொருட்களில் ஒன்றினை அதிகளவு உற்பத்தி செய்தல
3. குறிப்பிட்ட ஒரு நாட்டின் ஊழிய வளம் மிக மலிவாகக் காணப்படுதல்.
4. ஒரு நாடு மற்றைய நாட்டை விட குறிப்பிட்ட ஒரு பண்டத்தில் குறைந்தளவு அமையச் செலவினை கொண்டுள்ளது.
5. ஒரு நாடு மற்றைய நாட்டை விட குறிப்பிட்ட பொருள் உற்பத்தியை மிகக் குறைந்த பணச் செலவில் உற்பத்தி செய்தல்.

(13) மையப் பணவீக்கக் கணிப்பீட்டின் அடிப்படையில் இலங்கையில் தற்போது உள்ள பணவீக்க நிலை?
1. 28.5% 2. 7 - 8% 3. 9 – 10% 4. 15.8% 5. 17.5%

(14) 2007 இன் தலா வருமானம்
1. 1355$ 2. 1421$ 3. 1617$ 4. 1599$ 5.1402$

(15) தற்போது உலகில் இடம் பெற்று வரும் பொருளாதார பிரச்சனைகளில் மிகவும் முக்கியத்துவம் கொடுப்பது.
1. உலகளாவிய சந்தையில் பால்மா விலை உயர்வடைந்து வருகின்றமை
2. உணவுப் பொருட்களின் உற்பத்தி தட்டுப்பாட்டோடு விலை அதிகரித்துள்ளமை
3. எரிபொருட்களின் விலைகள் என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளமை
4. பச்சை வீட்டு வாயுக்களால் உலக வெப்பநிலை முன்னெப்போதும் இல்லா அளவிற்கு அதன் தாக்கம் உணரப்பட்டமை
5. வறுமையை ஒழித்தல் வேண்டும் என்ற ஏகோபித்த கருத்து வலுப்பெற்றமை.

(16) இலங்கையில் வறுமை நிலையினை காட்டக்கூடிய சிறந்த சுட்டி பின்வருவனவற்றில் எது?
1.பௌதீக வாழ்க்கை தர பண்புச்சுட்டெண் 2. அவலநிலைச் சுட்டெண்
3. வறுமை இடைவெளி 4. கினிக்குணகம்
5. 1 டொலருக்கு குறைந்த வருமானம் பெறும் சனத்தொகை

(17) போலி நாணயம் என்பது
1. சட்டவிரோத பணம் 2. ஊத்தைப் பணம்
3. திரவத்தன்மை குறைந்த பணம 4. கறுப்புப் பணம்
5.உயர்ந்ததிரவத்தன்மை வாய்ந்த சொத்துக்கள்

(18) நிலைத்து நிற்கும் அபிவிருத்தி பற்றிய ஆய்வாளர்களது கருத்து எது?

..............................................................................

(19) அண்மை ஆண்டில் இலங்கை மக்கள் நாளாந்தம் உட்கொள்ளும் ஊட்டச்சத்தின அளவு
1. 2325 கலோரி 2. 2329 கலோரி 3. 2349 கலோரி
4. 2500 கலோரி 5. 2225 கலோரி

## பகுதி II

### உப பகுதி "அ"

(01) I) வங்கித் துறைக் கட்டமைப்பிலுள்ள வணிக வங்கியின் எளிமைப்படுத்தப்பட்ட ஐந்தொகை வடிவம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது. காசொத்துக்கு வீதம் 10% ஆகும்.

| பொறுப்பு | ரூ.மில்லியன் | சொத்து | ரூ.மில்லியன் |
|---|---|---|---|
| கேள்வி வைப்பு | 150,000 | ஒதுக்கு | 25,000 |
| பங்குதாரரின் பங்குகள் | 50,000 | ஆவணங்கள் | 75,000 |
| | | கடன் வைப்பு | 100,000 |
| | 200,000 | | 200,000 |

1) இவ்வங்கியின் மிகை ஒதுக்கினைக் காண்க?
2) வங்கி வழங்கக் கூடிய கடனின் உச்சத் தொகை?
3) கடன் வழங்கிய பின் வங்கி ஐந்தொகை எவ்வாறு மாற்றமடையும்?
4) இவ்வங்கி புதிய கடன்களை வழங்கும் பொருட்டு வழங்கிய காசோலைகள் பணம் வங்கிக் கெதிராக தீர்ப்பனவு செய்யப்படின் அதன் ஐந்தொகை எவ்வாறு மாற்றமடையும்?
5) இவ்வங்கியின் மொத்த கடனாக்க உச்ச எல்லை யாது?
6) இவ்வங்கியின் பணவாக்கப் பெருக்கி யாது?

(II) இலங்கையின் நிதித்துறை தொடர்பான கருதுகோள் நிதிய தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன.

| விடயம் | ரூபா பில்லியன் |
|---|---|
| 1. வெளிநிற்கும் நாணயம் | 800 |
| 2. பொதுமக்களிடம் உள்ள காசு | 300 |
| 3. வணிக வங்கிகளிடமுள்ள காசு | 500 |
| 4. மத்திய வங்கியிடமுள்ள அரச முகவர்களின் வைப்புக்கள் | 350 |
| 5. மத்திய வங்கியிடமுள்ள வர்த்தக வங்கியின் வைப்புக்கள் | 400 |
| 6. வணிக வங்கியிடமுள்ள கேள்வி வைப்புக்கள் | 600 |
| 7. உள்நாட்டு வங்கி நாணய தொழிற்பிரிவின் வைப்புக்கள் | 200 |
| 8. கரைகடந்த வங்கித் தொழிற்பிரிவின் வைப்புக்கள் | 850 |
| 9. உரிமம் பெற்ற சிறப்பு நிதிக் கம்பனிகளின் வைப்புக்கள் | 600 |
| 10. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் வைப்புக்கள் | 250 |

கணிக்க
1) உயர் வலுப் பணம் (High Power Money) 2) குறுகிய பணம் (M1)
3) மிக விரிந்த பணம் (M4) 4) போலி நாணயம் 5) பணப் பெருக்கி (M2b)

(02) அ) மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் நாணய (நிதிக்) கொள்கையின் முக்கிய நோக்கம் பேரினப் பொருளாதார உறுதிப் பாட்டினை அடைவதாகும். இதற்கமைய அண்மையில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் யாவை?

ஆ) கடன் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் ஓர் அங்கம் வணிக வங்கிகள், பொதுமக்கள் என்போரின் மிகைத் திரவத்தன்மையை உறிஞ்சல் என்பதாகும். மத்திய வங்கியின் இச் செயற்பாட்டினை சுருக்கமாக விளக்குக?

இ) வங்கிகளின் இடர் நேர்வு முகாமைத்துவம், பாசல் II போதுமாந்தன்மை நியமம் வேறுபடுத்துக.

ஈ) பொருளியலாளர்கள், தற்போது உணவுப்பணவீக்கம் பற்றி அதிகம் பேசுகின்றனர். இலங்கையின் அனுபவத்தினைக் கொண்டு விளக்குக?

உ) மையப் பணவீக்கம் என்றால் என்ன? இதன் கணப்பீட்டின் அவசியத் தன்மையை விளக்குக?

(03) இரு நாடுகள் இரு பொருட்கள் என்பவற்றின் உற்பத்தி பற்றிய தகவல்கள் பின்வருவன
I ஒரு அலகை உற்பத்தி செய்வதற்கான ஊழியம்

| | நிக்கரகுவா | Jappan (T.V) |
|---|---|---|
| தொலைக்காட்சி | 10 | 02 |
| வாழைப்பழம் | 02 | 08 |

1) ஜப்பானிலும், நிக்கரகுவாவிலும் தொலைக்காட்சி உற்பத்திக்கான அமையச் செலவு யாது?
2) எந்நாடு வாழை உற்பத்திலும், T.V உற்பத்தியிலும் ஒப்பீட்டு நன்மை பெறும்?
3) எந்நாடு வாழை உற்பத்தியிலும், T.V உற்பத்தியிலும் முழுநயம் அனுபவிக்கும்?
4) உலக வர்த்தகத்தின் விளைவின் நன்மைகளைத் தருக?

(ii) GATT என்ற அமைப்பினை பெயரிடுக? சர்வதேச வர்த்தகத்திற்கு அதன் பங்களிப்பினை விளக்குக?

(iii) காட்டல், குவித்தல். விளக்குக

(04) (i) நாடொன்று குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் தனது வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களினை காட்டும் அட்டவணை பின்வருமாறு?

| விடயம் | ரூபா, மில்லியன் |
|---|---|
| 1. பொருள் ஏற்றுமதி | 7000 |
| 2. பொருள் இறக்குமதி | 11000 |
| 3. பணிகள் தேறியது | 200 |
| 4. வருமானப் பெறுகைகள் | 400 |
| 5. வருமான செலுத்தல்கள் | 800 |
| 6. தனியார் மாற்றல் தேறிய பெறுகை | 2000 |
| 7. அலுவல் சார் மாற்றல் தேறியது | 100 |
| 8. மூலதன கணக்கு | 200 |
| 9. நிதியில் கணக்கு | 1800 |
| 10. நேரடி முதலீடு | 500 |
| 11. மூலதன மாற்றல் உட்பாய்ச்சல் | 300 |

கணிக்க.
1) பொருள்கள் சேவைகள் கணக்கு நிலுவை
2) நடைமுறை கணக்கு நிலுவை?
3) மூலதனக் கணக்கு நிலை?
4) திரண்ட நிலுவை யாது?

(ii) சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2007இல் 531$ பில்லியனை கொண்ட மிகையைப் பதிவு செய்துள்ளது. இந்நிலைக்கு செல்வாக்குச் செலுத்திய காரணிகள் யாவை?

### உப பகுதி "ஆ"

(05) அ) வறுமை ஒழிக்கப்படவேண்டும் என்பது உலக ரீதியான பொதுப்பிரகடனமாகும். இதனை எதிர் கொள்ள இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

ஆ) "வருமான ஏற்றத் தாழ்வு நிலையே இலங்கையில் வறுமை நிலைமைக்கு காரணமாகும்" இக் கருத்தின் ஏற்புடைமை பற்றி நீர் கூறும் விளக்கம்?

இ) அளவுகள் சார் வறுமை, பண்பு சார் வறுமை எண்ணக் கருக்களினை விளக்கி அதனைக் காட்டும் குறிகாட்டிகளைத் தருக?

ஈ) இன வறுமை, பிரதேச வறுமை வேறுபடுத்தி இலங்கையில் இவ்வறுமை உள்ளதென உம்மால் அடையாளப்படுத்த முடியுமா? விளக்குக?

(06) அ) இலங்கை இருபுடை வர்த்தகத்திலிருந்து பல்புடை வர்த்தகத்தினை நோக்கி நகருகின்றது. இச் செயலாற்றிற்கு நீர் கூறும் நியாயங்கள் யாவை?

ஆ) வெளிநாட்டுக் கடன், வெளிநாட்டு உதவி, வெளிநாட்டுமுதலீடு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை விளக்குக?

இ) சிலவகையான வெளிநாட்டுக்கடன்களை உதவி என குறிப்பிடுவதன் காரணம் யாவை?

ஈ) 'தெற்காசிய நாடுகளின் சார்க் மாநாட்டில் இந் நாடுகளுக்கிடையே ஓர் ஏற்றுக்கொள்ளத்தகு பொது நாணயம் தோற்றுவிக்கப்படவேண்டும்' என்ற கருத்து வலுப்பெற்றது இது நிறைவேற்றப்படுமாயின் இலங்கை, எதிர்நோக்கும் சாதக பாதக நிலையை பரிசீலிக்க.

(07) அ) மகிந்த சிந்தனையின் படியான 8% சதவீத பொருளாதார வளர்ச்சியை உறுதியாக அடைவதற்கு எடுக்கவேண்டிய அவசிய நடவடிக்கைகளை குறிப்பிடுக?

ஆ) பகிர்வுடன் கூடிய பொருளாதார வளர்ச்சி என்றால் என்ன? இலங்கையில் அதன் பொருத்தப்பாடு என்ன?

இ) பொருளாதார வளர்ச்சியின் பயன் அனைத்து மக்களுக்கும் கிடைக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும். அப்படியாயின் மேல்மாகாணம் மொ.உ.உற்பத்தியில் 50.1% பெற்றுக் கொள்ள வடமாகாணம் 2.9% பங்கினையே பெறுகின்றது இது பற்றிய உமது கருத்து?

(08) அ) தொழில்வலை, பாதுகாப்பு வலை எண்ணக்கரு விளக்கம் தருக?

ஆ) இலங்கையில் வேலையின்மையில் ஓர் வீழ்ச்சி நிலை தென்படுகின்றது இந்நிலைக்கு பங்களித்த காரணிகளை ஆராய்க?

இ) வேலையின்மைக்கு கிராம - நகர சனத்தொகை இடம்பெயர்விற்கு ஏதாவது காரணம் உண்டா? அப்படியாயின் அவை எவை?

ஈ) அடுத்து வரும் தசாப்தங்களில் இலங்கையின் வயதமைப்பில் நிகழும் மாற்றங்கள் சனத்தொகை பிரமிட் அமைப்பினை மாற்றி விடும் என பொருளியலாளர்கள் எதிர்வு கூறுகின்றனர். இதனை ஏற்று கொள்கிறீரா? ஆதாரத்துடன் விளக்குக? (முற்றும்)

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

முன்னோடிப் பரீட்சை
Pilot Examination

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13

கணக்கீடு -II (பகுதி I)
Accounting -II (Part I)

1 மணித்தியாலம்
One Hour

(17) இலங்கை கணக்கீட்டு நியமம் -12 இற்கு இணங்க ஐந்தொகை தினத்திற்கு பிந்திய நிகழ்வுகளுள் சீராக்கப்படும் நிகழ்வொன்றாக கருதப்படுவது (2007 டிசெம்பர் 31 கணக்காண்டு இறுதித்தினமாகக் கொள்க.)
1) இயக்குனர்களால் சாதாரண பங்கு தொடர்பாக 10%பங்குலாபம் பிரேரித்தல்
2) ரூபா 20000 கிரயமுடைய தொக்குகள் முழுமையாக தீயால் அழிவுறுதல்
3) ஐந்தொகை தினத்தில் உள்ள கடன்பட்டோர் நிலுவை ரூபா 10000. ஐந்தொகை தினத்திற்கு பிந்திய தினத்திற்குள் வகையற்றவராதல். ____
4) 2007.03.31 இல் ஊழியர்களுக்கு ரூபா 200000 மேலதிகபடிகளாக வழங்குதல்
5) 2007.03.31 இல் பொது ஒதுக்கத்திற்கு ரூபா 250000 மாற்ற தீர்மானித்தல்

**வினா இலக்கம் 18,19 என்பவற்றுக்கு விடையளிக்க கீழ்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.**

உற்பத்தி செயற்பாடு தொடர்பான தரவுகள்

| | | |
|---|---|---|
| நிலையான செலவு | ரூபா | 125000 |
| விற்பனை அலகுகள் | | 20000 |
| அலகொன்றின் விற்பனை விலை | ரூபா | 20 |
| இலாபம் | ரூபா | 45000 |

(18) மேலே கூறப்பட்ட தரவுகளின்படி விற்பனை வருமானம் யாது?
1) ரூபா 400000 2) ரூபா 294118 3) ரூபா 225000
4) ரூபா 625000 5) ரூபா 600000

(19) பங்களிப்பு சதவீதம் யாது?
1) 42.5% 2) 20.5% 3) 36% 4) 25% 5) 62.5%

(20) நிறுவனம் இயந்திரசாதனமொன்றை கொள்வனவு செய்ய தீர்மானித்தது. இதன்கொள்விலை ரூபா 100000 மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் 04 ஆண்டுகள் ஆகும். எஞ்சிய பெறுமதி இல்லை.

மேலதிக தகவல்கள்

| | | ஆண்டுகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| எதிர்பார்க்கப்படும் வருமானம் | ரூபா | 20000 | 30000 | 50000 | 60000 |
| பராமரிப்பு கிரயம் | ரூபா | 8000 | 8000 | 8000 | 8000 |
| கட்டணங்களும் வேறுசெலவுகள் | ரூபா | 2000 | 2500 | 3000 | 4000 |

முதலீடு திரும்பல் காலம் யாது?
1) 04 ஆண்டுகளும் 02 மாதமும் 2) 02 ஆண்டுகளும் 08 மாதமும்
3) 03 ஆண்டுகளும் 06 மாதமும் 4) 03 ஆண்டுகளும் 04 மாதமும்
5) 03 ஆண்டுகளும் 08 மாதமும்

**வினா இலக்கம் 21 தொடக்கம் 30 வரையிலானவற்றுக்கு சுருக்கமான விடையளிக்க.**

(21) உபகாரப் பங்கு வழங்குவதற்கான இரு நிபந்தனைகளை குறிப்பிடுக.
1) ....................
2) ....................

(22) காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கான இரு நோக்கங்களை குறிப்பிடுக.
1) ....................
2) ....................

(23) கணக்கீட்டு கொள்கை மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய 02 சந்தர்ப்பங்களை குறிப்பிடுக.
1) ....................
2) ....................

(24) கடன்பட்டடோர் பணவசூலிப்பு காலம் அதிகரிப்பதனால் ஏற்படக்கூடிய 02 தாக்கங்களை குறிப்பிடுக.
1) ....................
2) ....................

(25) பாதுகாப்பு எல்லையை கணிப்பிட்டுக் கொள்ளக்கூடிய 02 வழிமுறைகளை குறிப்பிடுக.
1) ....................
2) ....................

(26) கழிவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் முறையின் 02 நன்மைகளை குறிப்பிடுக.
1) ....................
2) ....................

(27) கொள்வனவு கோரிக்கைக்கும், பொருள் கோரிக்கைக்கும் இடையிலான 2 வேறுபாடுகளைத் தருக?
1) ....................
2) ....................

(28) புதிய 2007ஆம்ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டத்தின்படி பொதுக்கம்பனியில் ஏற்பட்ட மாற்றங்கள் 02 ஐக் குறிப்பிடுக.
1) ....................
2) ....................

(29) புதிய கம்பனிச்சட்டத்தின் படி முன்னைய முன்னுரிமைப்பங்கு கழிவு கணக்கு பிரதிபலிப்பதற்கான பதிவினை தருக.
1) ....................
2) ....................

(30) கட்டுப்படுத்தும் இயல்பினை அடிப்படையாக கொண்டு கிரயங்களை வகைப்படுத்தும் 2 முறைகளையும் அவற்றுக்கான ஒவ்வொரு உதாரணங்களையும் தருக?
1) ....................
2) ....................

**பின்வரும் கூற்றுக்கள் சரியா/தவறா எனக் குறிப்பிடின் போதுமானது.**

(31) இலங்கைக் கணக்கீட்டு நியமம் -10 இற்கு இணங்க நிதியறிக்கைகள் தயாரிக்கும் பொழுது கணக்கீட்டு கொள்கைகள் மாற்றமடையுமாயின் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். (          )

(32) சம்பள கொடுப்பனவு எழுதுவினைஞரால் சம்பள அதிகரிப்பு அட்டவணை சம்பளப்பட்டியல் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும். (          )

(33) இலங்கைக் கணக்கீட்டு நியமம்-05 இனாலும் 18 இனாலும் கையிருப்புகளின் நியாய பெறுமதி வரையறுத்து கூறப்பட்டுள்ளது. (          )

(34) நிறையளித்த சராசரி விலையிடல் முறையில் இருப்புக் கணிக்கும் போது இருப்புக்களின் மொத்தப் பெறுமதியும், இருப்பு அலகுகளும் கருத்திற் கொண்டு விலை தீர்மானிக்கப்படும். (          )

(35) கழிவீடு செய்யப்பட்ட மாற்றுண்டியல் நிதியறிக்கைகளில் பிரதிபலிக்கப்படும் (          )

**வினா இலக்கம் 36 தொடக்கம் 40 வரையானவற்றிற்கு கீறிட்ட இடங்களை நிரப்புக.**

(36) பணத்தின் காலப்பெறுமதியை நிர்ணயிப்பதில் செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணியாவது .................... ஆகும்.

(37) வணிகரொருவருக்கு கடன் வழங்குவது தொடர்பாக வங்கிகள் கருத்தில் கொள்ளும் 02 பிரதான விகிதங்களாவன,
1) ....................
2) ....................

(38) வட்டிக்காப்பு விகிதம் கணிப்பிடுவதற்கு தேவைப்படும் பிரதான 02 தரவுகளாவன,
1) ....................
2) ....................

(39) உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று தயாரிப்பதன் பிரதான குறிக்கோள் .................... ஆகும்.

(40) இலாபநட்டமற்ற புள்ளியினை அலகுரீதியான குறைப்பதற்கு கருத்தில் கொள்ள வேண்டிய 02 விடயங்களாவன,
1) ....................
2) ....................

முன்னோடிப் பரீட்சை
Pilot Examination

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13

கணக்கீடு - II (பகுதி II)
Accounting -II (Part II)

2 மணித்தியாலங்கள்
Two Hours

**எல்லாமாக 05 வினாக்களுக்கு விடையளிக்க. (முதலாம் வினா கட்டாயமானது)**

வினா• இல.01

எல்டோராடோ லங்கா லிமிடெட் 2000ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகும்.2007.03.31இல் உள்ளபடியான பரீட்சை நிலுவை வருமாறு.

| விபரம் | வரவு (000) | செலவு (000) |
|---|---|---|
| கூறப்பட்ட மூலதன கணக்கு (100000 சாதாரண பங்குகள்) | | 4000 |
| பொது ஒதுக்கீடு | | 1000 |
| இலாப நட்டக்கணக்கு 31.03.2006 இல் | | 2295 |
| காணியும் கட்டிடங்களும் (கிரயம்/மீளவிலை மதித்தல் பெறுமதி) | 9400 | |
| பொறியும் , பொறிவிருட்சங்களும் -(கிரயத்தில்) | 2620 | |
| தளபாட பொறுத்துக்கள் -(கிரயத்தில்) | 2320 | |
| விநியோக வாகனங்கள் - (கிரயத்தில்) | 2820 | |
| திரண்ட தேய்வு- 2006.03.31 வரை -கட்டிடங்கள் | | 170 |
| -பொறியும்,பொறிவிருட்சங்களும் | | 820 |
| -தளபாட பொறுத்துக்கள் | | 710 |
| -விநியோக வாகனங்கள் | | 880 |
| மீள விலைமதித்தல் ஒதுக்கம் -கட்டிடம் | | 500 |
| வியாபார தொக்கு 2007.03.31 இல் | 480 | |
| விற்பனை கிரயம் | 16580 | |
| விற்பனை | | 30520 |
| வியாபார வருமதிகள் | 3020 | |
| ஐயக்கடன் ஏற்பாடு-2006.03.31 இல் | | 205 |
| வங்கிக் கணக்கு மீதி | 302 | |
| வியாபார சென்மதிகள் | | 1990 |
| வருமானவரி ஏற்பாடு (2005/06) | | 120 |
| செலுத்திய வருமானவரி (2005/06) | 100 | |
| செலுத்திய வருமானவரி (2006 /07) | 1000 | |
| அட்டுறு செலவினங்கள் | | 105 |
| தாபனநிர்வாக செலவினங்கள் | 3110 | |
| விற்பனை பங்கீட்டு செலவினங்கள் | 2020 | |
| 24% சதவீத, வங்கிக்கடன் | | 875 |
| செலுத்திய வட்டிச் செலவு | 18 | |
| செலுத்திய பணிப்பாளர் வேதனங்கள் | 360 | |
| செலுத்திய கணக்காய்வு கட்டணம் | 40 | |
| | 44190 | 44190 |

மேலதிக் தகவல்கள்

1) நிறுவன புத்தகப் பதிவாளரால் தயாரிக்கப்பட்ட வங்கிக்கணக்கிணக்கக் கூற்றின் பொழிப்பு வருமாறு,

2007.03.31 இல் உள்ளபடி வங்கிக்கணக்கிணக்க கூற்று

| | | |
|---|---|---|
| வங்கி கூற்றின் படி மீதி | | ரூபா 459000 |
| கூட்டுக. | | |
| காசேட்டில் பதியப்படாத கடன்வட்டியும், தவணைக்கட்டணமும் ரூபா | 43000 | |
| வசூலிக்கப்படாத காசோலைகள் | 120000 | 163000 |
| | | 622000 |
| கழிக்க. | | |
| வங்கிக்கு நேரடியாக செலவு வைத்த முதலீட்டு வருமானம் | 70000 | |
| கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாதவை | 250000 | (320000) |
| காசேட்டின்படி வங்கி மீதி | | 302000 |

2007.ஜனவரி 31 இல் கம்பனி வங்கியிலிருந்து ரூபா 900000 கடனொன்றைப் பெற்றுக் கொண்டது. இக்கடன் 36 சமமாதாந்த தவணைக்கட்டணங்களாக பெப்ரவரி 2007 இலிருந்து செலுத்தப்படும்.வங்கி கம்பனியின் நடைமுறைக்கணக்கிற்கு வட்டியையும், கடன்தவணை தொகையையும் நேரடியாக தாக்கல் செய்துவிடும்.

| விபரம் | 2006மார்ச் 31 இல் அட்டுறு செலவினங்கள் | 2007 மார்ச் 31 இல் அட்டுறு செலவினங்கள் | 2007 மார்ச் 31 இல் முற்பண கொடுப்பனவு |
|---|---|---|---|
| நிர்வாக செலவினங்கள் | ரூபா 55000 | ரூபா 15000 | - |
| விற்பனைபங்கீட்டு செலவினங்கள் | ரூபா 50000 | - | ரூபா 240000 |
| | 105000 | 15000 | 240000 |

3) நிகழாண்டுக்கு மதிப்பிடப்பட்ட வருமானவரி ரூபா 1200 000 ஆகும்.

4) 2005 ஏப்ரல் 01 இல் கட்டடத்தொகுதி முழுமையாக ரூபா 1700000 மீள் விலைமதிக்கப்பட்டது. மீள்விலை மதித்தல் மிகை மீள்விலை மதித்தல் ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது. கட்டடத்தின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகும். காணி கிரயத்திலேயே பிரதிபலிக்கப்படும்.

கணக்காண்டில் ரூபா 400000 கிரயமுடைய ஒரே ஒரு பொறி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஒரே ஒரு தளபாடம் ரூபா 30000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனையால் பெற்றபணம் தளபாட கணக்கிலேயே செலவு வைக்கப்பட்டதுடன் வேறெந்த சீராக்கமும் மேற்கொள்ளப்படவில்லை. விற்கப்பட்ட தளபாடம் 2003 ஜனவரியில் ரூபா 40000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டது.

கம்பனியின் பெறுமானத்தேய்வு கொள்கையானது கொள்வனவு செய்த ஆண்டில் பெறுமானத்தேய்வு தாக்கல் செய்யாது, விற்பனை செய்யும் ஆண்டில் ஒரு முழுவருடம் பெறுமானத் தேய்வு தாக்கல் செய்வதாகும். பெறுமானத்தேய்வு நேர்கோட்டு முறையில் பின்வருமாறு,

| | |
|---|---|
| பொறியும்,பொறிவிருட்சமும் | 20% சதவீதம் |
| தளபாடப் பொருத்துக்கள் | 10% சதவீதம் |
| விநியோக வாகனம் | 25% சதவீதம் |

5) 2006.03.31 இல் உள்ளபடியான ஐயக்கடன் கணக்கு பகுப்பாய்வு வருமாறு.

| | |
|---|---|
| வாடிக்கையாளர் - ரவி தொடர்பான விஷேட ஐயக்கடன் ஏற்பாடு ரூபா | 100000 |
| பொது ஐயக்கடன் ஏற்பாடு ரூபா | 105000 |
| | 205000 |

தற்போது வாடிக்கையாளர் ரவி தொடர்பான தொகை அறவிடமுடியாதென பதிவழிக்கவும். 2007.03.31 இல் எஞ்சிய வருமதிகள் தொடர்பாக 5% சதவீத ஏற்பாட்டினை பராமரிக்கவும் முடிவுசெய்யப்பட்டது.

(தொடரும்)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## நல்லூர் உற்சவம் 2008–வீதித் தடை பற்றிய அறிவித்தல்.

நல்லூர் கந்தசுவாமி வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கீழ்க் குறிப்பிடப்படும் வீதிகள்06–08–2008ஆம் திகதி தொடக்கம் 31.08.2008ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும்

01. ☞ அரசடி சந்திக்கும் 2ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்;
☞ பிராமணக் கட்டுக்குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கும் இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்;
☞ செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் அப்பாகம்;

02.பாதை மாற்றம்
☞ பேருந்துகள் , சிற்றூர்திகள் மற்றும் சுமைசுவடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச் சந்தையூடாகச் செல்லுதல்;
☞ பருத்தித்துறை வீதிக்கும் நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்குவீதி வழியாக பேருந்துகளும்; சிற்றூர்திகளும் செல்வது முற்றாகத் தடை செய்யப்படும்;

3.வாகனத் தரிப்பிடங்கள்
☞ முத்திரைச் சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியில்;
☞ கந்தர் மடம் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில்;
☞ அம்மன் வீதி பருத்தித்துறை வீதிச் சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியில்;
☞ செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால்;

(மு.செ.சரவணபவ)
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சீ/1382)

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் மிகுந்த உறுதியுடன் உள்ளோம்

## இந்தியப் பிரதமரிடம் இலங்கை ஜனாதிபதி

(கொழும்பு)

கிழக்கில் ஏற்பட்டு வரும் சாதகமான அபிவிருத்தி மற்றும் வடக்கில் புலிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கை



குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கிடம் விளக்கிக் கூறியுள் ளார்.

இலங்கையில் செய்துள்ள முதலீடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆற்றி வரும் உதவிகளுக்காகவும் ஜனாதிபதி இந்தியாவுக்கு தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பு வந்துள்ள இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்குடன் நேற்று முன்தினம் பி.ப. ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சுனாமி மீள் புனருத்தாரணம் உட்பட இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா வழங்கி வரும் ஒத்துழைப்பு களுக்காகவும் இந்தியா இங்கு செய்துள்ள முதலீடுகளுக்காகவும் ஜனாதிபதி மஹிந்த இந்தியப்பிரதமருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அத்தோடு கிழக்கில் தேர்தல் மூலம் உருவாக்கப்பட்ட புதிய மாகாண சபை, அங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், வடக்கில் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ



நடவடிக்கை குறித்தும் ஜனாதிபதி விளக்கிக்கூறியுள்ளார்.

அத்தோடு பாக்குநீரிணை கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் குறித்தும் இரு தலைவர்களும் கலந்துரையாடியுள்ளனர்.

அங்கு அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தாம் மிகுந்த உறுதியுடன் உள்ளதாகவும் இந்தியப்பிரதமரிடம் எடுத்துக் கூறியுள்ளார். (ஓ)

## தென் துருக்கியில் விடுதிக்கட்டம் இடிந்து விழுந்ததில் 14 மாணவர் பலி; 25பேர் காயம்

(துருக்கி)

தென் துருக்கியிலுள்ள பெண்கள் பாடசாலையொன்றில் 3மாடி விடுதி கட்டிடம்இடிந்து விழுந்ததில் குறைந்தது 14மாணவர்கள் பலியாகியுள்ளதுடன் 25பேர் காயமடைந்துள்ளனர்.

கென்யாமாகாணத்தில் தஸ்கென்ட் நகருக்கு அண்மையில் இடிந்து விழுந்த மேற்படி பாடசாலைக் கட்டிடஇடிபாடுகளிடையே மேலும் 6 மாணவர்கள் சிக்கியுள்ளதாகவும் அவர்களை மீட்கும் பணி தொடர்வதாகவும் கூறப்படுகிறது. இந்த அனர்த்தத்திற்கு எரிவாயு வெடிப்பே காரணமென நம்பப்படுகிறது.

அந்நாட்டு நேரப்படி அதி காலை 4.15மணிக்கு இந்த விபத்து இடம் பெற்ற போது மாணவர்களில் அநேகர் உறங்கிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்றபோது விடுதி யில் 8வயதிற்கும் 16வயதிற்கும்



இடைப்பட்ட சுமார் 40 சிறுமிகள் இருந்ததாக கூறப்படுகின்றது. (ஓ)

## கற்றல் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும்

யாழ்ப்பாண கல்விவலய முன்பள்ளிகள் இணைந்து நடாத்தும் கற்றல் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் இன்றும் நாளையும் காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ் வலயக்கல்விபணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறும்நிகழ்வில் யாழ் அரச அதிபர் க.கணேஷ்பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் பிராந்திய ஆணையாளர் திருமதிப.சிவலிங்கம் , உள்ளூராட்சி உதவிக் ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ஓ-ச)

# மகத்தான திறமையும் மண்ணுக்குப் பெருமையும்

தேசத்தின் வங்கியாளராகிய இலங்கை வங்கி இன்று நாடளாவிய ரீதியில் வங்கிச் சேவையுடன் மட்டும் நின்று விடாது நாட்டு மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்து பல செயற்பாடுகளைச் செய்து வருகின்றது. அதன் நிர்வாகி கட்டமைப்பு மக்களின் கல்வி ,கலை கலாசாரம், விளையாட்டு போன்றவற்றின் வளர்ச்சியை மேம்படுத்தும் பணியையும் ஆற்றி வருகின்றது.

அதனங்கமாக புதிய புதிய கிராமங்களை இனம் கண்டும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றை நடாத்தியும் அங்கு மக்களின் வளர்ச்சிக்கான கடன்களை வழங்கியும் ஆண்டு ஐந்து புலமைப் பரிசில், க.பொ.த. (சாதாரணம்/உயர்தரம் ) போன்ற பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கி அவர்களைக் கௌரவித்தும் வருகின்றது.

அதுமட்டுமல்லாது எமது மண்ணில் பெருமையை உயர்த்தி நிற்பவர் வரிசையில் அபரிமிதமான தம் பங்களிப்பை பாரம்பரியமாகவே வழங்கி வருபவர்கள் பலர் நம்மிடையே உள்ளனர். அவர்களை பாராட்டிக் கௌரவப்படுத்துவதும் அதனை வரலாற்றுப் பதிவேடுகளுக்குள் பதிந்து வைத்து எமது அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லும் ஒரு சீரிய பணியையும் இலங்கை வங்கி ஆற்றிவருகின்றது.

அந்த வகையில் சுமார் ஏழு தசாப்தங்களாக தமிழ் மக்களின் கலை சார்ந்த பாரம்பரியத் தொழில்களுள் ஒன்றான வெள்ளி, பித்தளை, செம்பு தொடர்பான உலோக வேலைகளில் ஈடுபட்டுவரும் குடும்ப மரபைச் சார்ந்த யாழ். வண்ணார் பண்ணை கெங்காதரன் அவர்கள் இன்று நம் மண்ணுக்குப் பெருமை சேர்த்து வருகின்றார். தந்தை எவ்வழி மைந்தன் அவ்வழி என்பதற்கு ஓர் உதாரண புருஷராக இவர் திகழ்கின்றார். இவரது தந்தையாரான இலட்சுமண ஆசாரி அவர்களின் வழியில் சிறு வயதிலிருந்தே நன்கு பயிற்சி பெற்று அதற்கான மன விருப்பம் கொண்டு இந்தப் பணியை ஆற்றுகின்றார்.



இவரது பணியில் சமய மரபுகளை அடிப்படையாகக் கொண்டு வழிபாட்டுத் தலங்கள் கோயில் சார்ந்த வேலைகளே பிரதானமாகக் கொள்ளக்கூடியதாக உள்ளது. ஆலயங்களின் ஆசார அனுட்டானங்களை பின்பற்றி செம்பு, வெள்ளி, பித்தளை போன்ற பல வகை உலோகங்களைப் பயன்படுத்தி நுணுக்கம் மிளிரும் கலை வடிவங்கள் பலவற்றை உருவாக்கி வருகின்றார். விக்கிரங்கள் தேர் வாகன வேலைப்பாடுகள் கோவில் கோபுரத்தில் பிரதிஷ்டை செய்யப்படும் கலசங்கள் கிறிஸ்தவ தேவாலய பூசைப் பொருட்கள் என்ற சமயம் சார்ந்த பொருட்களையும் வெற்றிக் கிண்ணங்கள் நினைவுக் கேடயங்கள் போன்ற பரிசுப் பொருட்கள் என வாழ்வியலுக்குச் சம்பந்த மான பலவற்றையும்தனதுகைவிரல்களால் உருவாக்கி சாதனை படைத்து வருகின்றார்.

தற்போது நமது ஆலயங்கள், புத்தாக்கம் பெறுவதையும் அங்கு காணப்படும் விக்கிரகங்களின் பின்னால் உள்ள கலையம்சங்கள் பொருந்திய திரு வாசிகளின் ஆகம முறைப்படி செய்த கோவில் கொடித்தம்பம் என்பவற்றில் இவரது திறமையையும் தேர்ச்சியையும் வெளிப்படுத்தி பக்தர்களின் மனம் கோவில்களில் ஒன்றித்து நிற்கும் வண்ணம் யாழ். மண்ணிற்கு பெருமை தேடித்தரும் உலோக வேலை விற்பனராக திகழும் இவர் வங்கியில் நடைபெறும் விழாக்களுக்கு நினைவுக் கேடயங்களையும் ஓய்வு பெற்ற வங்கியாளரைக் கௌரவிக்கும் நிகழ்வின் பரிசுப் பொருளான வங்கிச் சின்னத்துடன்– வங்கியாளர் பெயர் சேவைக் காலம் எனப் பல அம்சங்கள் பொறித்த குத்துவிளக்குகளை கலையம்சத்துடன் எமக்கு செய்து தந்து வங்கியாளர் அனைவருக்கும் அறிமுகமானதுடன் பாடசாலைகள், அரச திணைக்களங்கள் என இவரது கை வண்ணத்திற்கு குடாநாட்டில் சான்றாக இருப்பவர்கள் பலர்.

இவரது கை வண்ணத்தை கண்டு வியக்காதவர் யாருளர். மருதடி விநாயகர் ஆலய தேரிலும் மருதனார் மட ஆஞ்சநேயர் திரு முடியிலும் முருகன் கோவில்களின் வெள்ளி மயில் வாகனங்களிலும் கலையம்சம் பொருந்திய இவரது கை வண்ணம் காணக்கூடியதாக என்றும் இருக்கிறது.

இந்து ஆலயங்கள் மட்டுமல்லாது கிறிஸ்தவ தேவாலயங்கள் பலவற்றிலும் காணப்படும் கதிர்ப்பாத்திரம், நற்கருணைப் பேழை போன்ற பூசைபொருட்கள் கிரிடங்கள் பீட அலங்காரம் ஆகியவற்றிலும் அழகுற உருவாக்குவதன் மூலம் கிறிஸ்தவ சமூகத்திலும் தனி முத்திரை பதித்துள்ளார். இதனால் ஐரோப்பியக் கலைப் பாணியிலும் சிறந்த விற்பனராக திகழும் இவர் ஒரு இந்துவாக இருந்த போதிலும் இவரைக் கௌரவித்து கிறிஸ்தவ மதத்துக்கு இவர் ஆற்றிய சேவையை அங்கீகரித்து பாராட்டு முகமாக பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் 2001ஆம் ஆண்டு இவருக்கு அருளாசிச் சான்றிதழ் வழங்கியுள்ளார்.

25ஆண்டுகள் குருத்துவசேவையில் பெரும் பணி ஆற்றியவர்களுக்கும் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த தேவாலயங்களுக்குமே பாப்பரசரின்கையெழுத்துடனான அருளாசி கிடைப்பதுண்டு இதை அவர் பெரும் பொக்கிசமாகவே கருதுகின்றார். அவ்வாறு இவருக்கு கிடைத்த கௌரவ பட்டங்களா கட்டும் இவரது கை வண்ணத்தில் உருவான வேலைப் பாடுகளாகட்டும் போற்றுதற்குரியதே.

அந்த வகையில் இவருக்கு ஏற்கனவே– உலோக வேலை விற்பன்னர் –1992 யாழ். ரத்னா, கலாபூஷணம் விருது–2004 எனப் பல விருதுகள் கிடைத்திருக்க அண்மையில் இவரைக் கௌரவிக்கும் முகமாக யாழ் பிரதேச கலாசார விழாவில் யாழ். அரசாங்க அதிபர் கணேஷ் அவர்களால் யாழ் .ரத்னா விருது ம் வழங்கி கௌரவிப்பதற்கு இலங்கை வங்கி யாழ். விளையாட்டு நலன் புரி கழகம் இவரை தெரிவு செய்து வரலாற்றுப்பதிவேடுகளுக்குள் அடக்கிக் கொண்டுள்ளது.

ச. நடராஜா
இலங்கை வங்கி.யாழ். மேற்தரக்கிளை

இவரது மகத்தான திறமை எமது மண்ணுக்கு என்றும் பெருமையே. பாரம்பரியம் தளைத்திட பங்காற்றும் இவரது சேவை நமது நாட்டுக்கு என்றும் தேவை.

பண்போடு பொருந்தாத அனுதாபம் எல்லாம் மறைமுகமான சுயநலமே ஆகும்!
—கோலரிட்ஜ்

வலம்புரி

# இந்திய மத்திய அரசின் இறுதி முடிபு என்ன?

யுத்தம் இனப்பிரச்சினைக்கான தீர்வல்ல இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

இதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் ஈழத்தமிழர்களை கைவிட மாட்டோம் என்ற வகையில் பிரதமர் மன்மோகன் சிங் கூறியிருப்பதும் இங்கு நோக்குதற்குரியது.

பிரதமர் மன்மோகன் சிங்கின் கருத்துப்படி இலங்கையில் யுத்தம் நடைபெறவில்லை என்பது போலவும், யுத்தம் நடக்காதென்ற பொருளும் தொனிப்பதைக் காண முடியும்.

ஆனால் வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்தம் மூண்டிருக்கிறது. இத்னால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து சொல்லெணாத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நிலைமை இதுவாக இருக்கும்போது ஈழத் தமிழருக்கு இந்தியா உதவும் எனக் கூறுவதில் இம்மியும் உண்மையிருக்க முடியாது.

இலங்கையில் யுத்தம் நீண்டு செல்வதன் பின்னணியில் இந்தியாவின் பங்களிப்பு காத்திரமானதென்பதை மறுப்பதற்கில்லை.

ராஜீவ் காந்தியின் மரணத்தின் பின்னர் தமிழகத்தில் ஏற்பட்ட மனக்கசப்பு நிலையை சாதகமாக்கிக் கொண்டு இந்திய மத்திய அரசு ஈழத்தமிழர்களுக்குக் கெடுதி விளைவிக்கின்றதென்னும் யதார்த்தம் புரியாமல் இல்லை.

இருந்தும் அண்டை நாடு என்ற முறையிலும் எம் சகோதரர்களின் தாய் நாடு என்ற உறவு நிலையிலும் இந்தியாவின் உதவியை ஈழத்தமிழர்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

இந்த உதவி எதிர்பார்ப்பிற்கான இந்தியாவின் பதில் 'என்னால் தலையிட முடியாது' என்பதாக இருந்தால் அதனை மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால் ஈழத்தமிழர்களை கைவிட மாட்டோம், அவர்களுக்கு உதவுவோம் எனக் கூறிக்கொண்டு தமிழர்களின் தலையில் சம்மட்டியால் அடிப்பது மிகப்பெரும் துரோகத்தனமாகும்.

இதனையே இந்திய மத்திய அரசு நீண்டகாலமாகச் செய்து வருகிறது.

இந்திய வல்லாதிக்கத்துக்குள் இலங்கைத் தீவை உள்ளடக்குவதற்காக ஈழத்தமிழர் தொடர்பில் இலங்க்கை அரசு மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் ஆதரிப்பது எவ்வகையிலும் நியாயமாகாது.

உண்மையில் ஈழத்தமிழர்களுக்கு உதவ வேண்டுமென இந்திய மத்திய அரசு எண்ணியிருக்குமாயின் சார்க் மாநாட்டுக்கு முன்பாக இலங்கையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அரசு –விடுதலைப் புலிகள் உள்ளிட்ட இரு தரப்பு மூலமாக செய்திருக்க வேண்டும்.

அத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வை சார்க் மாநாட்டுக்கு முன்பாக முன்வைக்குமாறும் அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும்.

ஆனால் இதில் எதனையுமே இந்திய மத்திய அரசு செய்யவில்லை. இந்திய மத்திய அரசின் உள்ளார்ந்த நோக்கம், சார்க் மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்டு இலங்கையின் கௌரவத்திற்கு உதவுவதே ஆகும்.

# சார்க் மாநாட்டிற்குள் மறைந்து கொண்டு நாட்டை மண்டியிட வைத்தமையை கண்டிப்போம்

## தேசிய பிக்கு முன்னணி

(கொழும்பு)

எமது நாட்டின் சுயாதிபத்தியத்தை மீறி வான் பரப்பில் இந்திய விமானப் படையினரது ஹெலிகொப்டர்கள் பறப்பது பெரும் அவமானமாகும்.

இந்திய ஹெலிகொப்டர்களை பறக்க விட்டு நடத்தப்படும் சார்க் மாநாட்டினால் எமக்கு அகௌரவமே கிடைத்துள்ளது என்று தேசிய பிக்கு முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கையை ஆக்கிரமித்த இந்திய இராணுவத்தினரை நினைவு கூர்வதற்காக நினைவுத் தூபியை இங்கு அமைக்கும் அளவுக்கு மன்மோகன் சிங் அரசாங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினை மண்டியிட வைத்துள்ளது என்றும் முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

சார்க் மாநாட்டிற்குள் மறைந்து கொண்டு நாட்டை மண்டியிட வைத்தமையை கண் டிப்போம் என்ற தலையங்கத்தில் தேசியபிக்கு முன்னணியின் தலைவர் தம்பர அமிலதேரர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியப் பிரதமருக்கு பாதுகாப்பு வழங்க இந்திய கடற்படை கடலையும், விமானப்படை, வான் பரப்பையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. விடுதலைப் புலி பயங்கரவாதிகளை புறமுதுகு ஓடத்தோல்வியடையச் செய்து முல்லைத்தீவையும் விரைவில் கைப்பற்றப் போகும் எமது வீரமிக்க படையினரை கொச்சைப் படுத்துவதாக இத்தகைய செயல் அமைந்துள்ளது.

உலகின் 7ஆவது படை என மார்தட்டும் இந்தியப் படையினரால் புலிகளை தோல்வியடையச் செய்ய முடியாது போனது. ஆனால், எமது படையினர் இன்று வெற்றிகரமாக யுத்தத்தை முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறானதொரு சூழ் நிலையில் கறைபடிந்த 1987ஐ மீண்டும் நினைவு கூரும் விதத்தில் இந்தியா ஆக்கிரமித்துள்ளது.

இதன் மூலம் எமது படையினரால், உளவுப் பிரிவினரால் வெளிநாட்டுத் தலைவருக்கு பாதுகாப்பு வழங்க முடியாதென்ற செய்தியும் வெளியிடப் பட்டுள்ளது.

சார்க் வரலாற்றில் எந்தவொரு நாட்டிலும் இந்தியா இவ்வாறு தலையிடவில்லை. எமது நாட்டில் அல்லது தற்போது இந்தியாவிலேயே குண்டுகள் வெடிக்கின்றன. எனவே, அந் நாட்டிலேயே பாதுகாப்பு பலவீன மடைந் துள்ளது என்பதே உண்மையாகும். ஜே. ஆர்.1987இல் செய்தது போல் இன்றைய ஜனாதிபதியும் நாட்டை இந்தியாவுக்கு அடிமைப்படுத்தியுள்ளார். பிராந்தியத்தின் வல்லரசு என மார்தட்டும் இந்தியா, தாம் வளர்த்து போஷித்த புலிகளின் சரித்திரம் முடிவுறப் போவதை மறைத்து புலிகள் பலசாலிகள் என உலகுக்கு காட்டவும் வெளிநாட்டுத் தலைவர் களுக்கு இலங்கைப் படையினரால் பாது காப்பு வழங்க முடியாதென சர்வதேசத் துக்கு காட்டுவதற்காகவுமே இவ்வாறு நடந்து கொள்கிறது.

இலங்கையை ஆக்கிமித்த இந்தியப் படையினருக்கு நினைவுத் தூபி அதுவும் கிளிநொச்சியில் அல்ல எமது சுதந்திரத்தின் சின்னமா ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே பாராளுமன்றத்திற்கு அருகில் நிறுவப்பட்டுள்ளது. அந்தளவுக்கு மன்மோகன்சிங் அரசாங்கம் ஜனாதிபதி மஹிந்தவின் அரசாங்கத்தை மண்டியிடச் செய்துள்ளது. இது அரசாங்கத்திற்கு மட்டுமல்ல. இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் அவமானமாகும்.எனவே.இந்திய ஆக்கிரமிப் பிலிருந்து நாட்டை பாதுகாக்க தேசப் பற்றாளர்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும். (ஓ)

# மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை அரச ஊழியர் மத்தியில் ஏற்படுத்த நடவடிக்கை

வவுனியாவில் அரச அதிகாரிகள், அரச ஊழியர்கள் மத்தியில் மனித உரிமைகள் தொடர்பான அறிவை விருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் தெரிவித்தார்.

மனித உரிமைகள் பாதிக்கப்படும் பொழுது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றிய அறிவையூட்டுவதற்கும் மனித உரிமைகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதற்கும் பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படாமல் எவ்வாறு அரச ஊழியர்கள் தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துவதற்கும் இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் கூறினார்.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் சமூக, பொருளாதார சூழல் அபிவிருத்தியாளர்(சீட்)நிறுவனத்தின் அனுசரனையில் வியாழனன்று வவுனியா நகர சபையில் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் சுமார் 60அரச ஊழியர்கள் கலந்து கொண்டனர். வவுனியா நகர சபை செயலாளர் உட்பட முக்கிய அதிகாரிகள். அரச ஊழியர்கள், சிற்றூழியர்கள் என்போர் இதில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பயிற்சிப் பட்டறையின் செயுலமர்வுகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பதிகாரியும் அவரது உதவியாளர்களும் நடத்தினார்கள்.

இதே வேளை இந்தப் பயிற்சிப் பட்டறையானது வவுனியாவில் உள்ள அனைத்து அரச திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்கும் நடத்தப்படவுள்ளதாகவும் இது பற்றிய மேலதிக விபரங்களைமனிதஉரிமைகள்ஆணைக் குழுவின் வவுனியா பிராந்திய இணைப் பலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்த அலுவலகத்தைச் சேர்ந்த இணைப் பதிகாரி தெரிவித்துள்ளார். (ஓ)

# சுதந்திர தினமான ஓகஸ்ட் 15இல் கச்சதீவில் தேசியக் கொடியேற்றப்படும்

## இந்து மக்கள் கட்சி அறிவிப்பு

(சென்னை)

இந்திய சுதந்திரதின மான ஓகஸ்ட் 15இல் கச்சதீவில் தேசிய கொடியை ஏற்றப் போவதாக இந்து மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து தஞ்சையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதற்கு கச்சதீவு இலங்கையிடம் தாரை வார்க்கப்பட்டதே காரணம். தமிழக மீனவர்களின் உரிமைகளை நிலை நாட்டவும் இந்தப்பிரச்சினையில் மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கவும் சுதந்திர தினமான ஆகஸ்ட் 15 ஆம் திகதி கச்சதீவில் தேசியகொடியேற்றப்படும். இந்து மக்கள் கட்சியின் மாநில செயலர் அண்ணா துரை தலைமையில் கொடியேற்று விழா நடைபெறும் என்றார். (ஓ)

# பரிவுள்ளவர் இயேசு

நம் ஆண்டவர் இயேசு பரிவு உள்ளம் கொண்டவர்.மக்களுடைய துன்பங்களை தன்னுடைய துன்பமாக மக்களுடைய தேவைகளைத் தன்னுடைய தேவைகளாக மக்களுடைய பசியைத் தன்னுடைய பசியாக மக்களுடைய நீதி வேட்கையை தன்னுடைய வேட்கையாகக் கருதினார். இவைகளே இயேசுவின் மலைப்பொழிவின் சாரம்.

இதையே இன்றைய நற்செய்தியில் பார்க்கின்றோம். திரளான மக்கள் இயேசுவைப் பின் தொடர்ந்து அவருடைய போதனையைக் கேட்க கண் தூங்காது, பசியறியாது களைப்புறாது, நோய் பாராது கேட்டுக் கொண்டிருந்தனர். அம் மக்கட் கூட்டத்தைக் கண்டு இயேசு அவர்கள் மீது பரிவு கொண்டார். எனவே அம் மக்களைத் தொட்டு நோய்களினின்று சுகம் அளிக்கின்றார். இதுதான் இன்றைய நற் செய்தியின் முதல் பகுதி.

இயேசுவின் கனிவு உள்ளம் அப் பங்களைப் பகிரவைத்து மக்களின் பசியைப் போக்கியது. ஆனால் சீடர்களின் கடின உள்ளம் அப்பங்களைப் பதுக்கிவைத்து மக்களை பசியோடு விரட்டியடிக்கப் பார்த்தது.

அப்பமும் மீனும் அன்றைய ஏழைகளின் தினக்கூலிகளின் அன்றாட உணவு. அன்றாடம் வேலை செய்தால் தான் அன்றைய வயிற்றைக் கழுவ முடியும். ஆனால் இங்கு இந்த மக்ள் 2, 3 நாட்களாக வேலை செய்யாமல் இயேசுவைப் பின்தொடர்ந்து போதனையைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அப்படியென்றால் இனி அவர்கள் உணவு வாங்க ஒன்றும் இருக்காது. மக்கள் பட்டினியாகத்தான் செல்ல வேண்டும். இதை உணர்ந்து தான் இயேசு அவர்கள் மீது பரிவு கொண்டார். உணவைப் பகிர்ந்து கொடுத்தார்.

### பரமபிதா காட்டிய பாதை




நாம் எந்த நிலை? எரிகின்ற இதயத்திற்கு எண்ணெய் வார்க்காமல் இதயம் குளிர தண்ணீர் ஊற்றுவோம் பரிவும் அக்கறையும் கொண்டு அடுத்தவரை வாழ வைப்போம். அப்போதுதான் நாம் இயேசுவின் சீடர்களாவோம். கனிவான வார்த்தை செயலில் வெளிப்படாவிட்டால் அது குறைவுடையது என்று சாமுவேல் ஜான்சன் கூறுகின்றார்.


ஜோன் றொபேர்ட்


# இரதோற்சவ சிறப்பு மலர் 03.08.2008

## அருள்தரு கேணியடி காளியம்பாள் தேவஸ்தானம்

## கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்







### ஆசிச் செய்தி

அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் கிடைக்கும் .

மஹோற்சவ பிரதம குருவும் ஆலய நித்திய குருவும்
விஸ்ணு துரந்தரர். சிவஸ்ரீ ரவீந்திரகுமாரக் குருக்கள்.

### ஆசிச் செய்தி

தேரேறி வரும் அம்பிகை சகல அடியவர்களுக்கும் துன்பங்கள் நீங்கி வாழ திருவருள் புரியவேண்டும்.

மு.அருமை நாயகம் – தலைவர்,
ஆலய அறங்காவலர் சபை, அருள் தருகேணியடி காளியம்பாள்
தேவஸ்தானம், ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு.

## "வெள்ளி அரவுருவில் வெளிப்பட்ட ஸ்ரீ காளிகாதேவியை பணிவார்க்கில்லை துன்பமே"

### வரலாறு

நிலம், நீர்,நெருப்புயிர் நீள் விசும்பு புலனாய ஐந்தும் அணுமுதல் அண்ட பகிரண்டம் ஈறாக சக்தியின் பேராற்றல் நிறைந்திருப்பதைக் காணலாம். சக்தியில்லையெனில் உலகின் சுழற்சியோ. சுடரிரண்டோடு பிறகோள்களின் இயக்கமோ இல்லை. பொருட்களின் அசைவு இல்லை இயற்கையின் செழிப்பில்லை நிலமைந்தின் வளமும் இல்லை. சகல பொருட்களுக்கும் எல்லா உயிரினங்களுக்கும் ஊற்றாகி, உட்பொருளாகி நின்று இயங்குவது சக்தியே.

பிரம்மம் ஒன்றே என்பதனை "ஏகம் ஏவ அத்துவிதீயம்" என வேதம் சொல்கிறது. எனவே எங்கும் பிரம்மமாய் சோதிப் பொருளாய் ஈறில்லாப் பதங்கள் யாவையும் கடந்து நின்றாளும் சக்தி நமக்கு முன்னின்று சுரக்கும் இன்னருள் தெய்வமாய் பால் நினைந்தூட்டும் தாயாக திகழ்பவள் சக்தியே. ஆதிபராசக்தியானவள் பற்பல தெய்வ வடிவங்களில் தோன்றி திருநாமங்கள் பலவும் பூண்டு திருவிளையாடல்கள் புரிந்து நம்பிக்கை ஊற்றாகி நன்மையளிக்கின்றாள். புவனத்தைக் காக்கும் பூரணியாக , சாந்தாருளும் சங்கவியாக, அன்பை பொழிவதில் அம்பிகையாக வைதாரையும் வாழவைத்து ஆறுதல் ஈய்ந்து அருட் புனலால் ஆற்றுப்படுத்தும் அம்மையை

"அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயிலே" எனத் தாயுமான சுவாமிகள் போற்றிவழிபட்டார். எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்து வருந்தும் உயிர்களுக்கு பிறவிப் பிணியறுத்து பேரின்ப பெருவாழ்வை கொடுத்து ஆட்கொள்வதே அன்னையின் அருள் நோக்காகும். தனம் தருவாள், கல்வி தருவாள் தளராத மனமும் தந்து ஈற்றில் தெய்வ வடிவும் தந்து முத்திக்கு வித்தாகி நிற்பாள்.

புவனம் பதினான்கையும் பூத்த வண்ணம் காத்து நிற்கும் அம்மை திரிசூலியாக, திவ்விய சொரூபியாக , சிம்மவாஹினியாக, கருமைத்திரு மேனியளாக, காளிகா பரமேஸ்வரியாக கோண்டாவில் திருவூரில் கோயில் கொண்டு அருள் பாலிக்கின்றாள். பொன் கொழிக்கும் வளம் நிறை மண்ணுடை கோண்டாவில் ஞானியார் வாழ்ந்த பெருமையும் பெற்றது. குரு சுவாமியின் திருவடிவத் தடம் பதிந்த பேறுடைத் திருவூர். மெச்சத்தகு புனிதம் நிறைந்த இவ்வூரில் காளிகா பரமேஸ்வரி உறைகின்ற கேணியடித் திருப்பதியை சூழ திருக்கோயில்கள் பல மலிந்துள்ளது. மகோஹ்சவம் பெருவிழாப் பொலிவு காணும் திருத் தலங்கள் நிறையவே உண்டு. ஆதிசிவனுக்கோர் ஆலயம் உண்டு. ஸ்ரீ ஐயப்பசுவாமிக்கும் ஸ்ரீ மன் நாராயண மூர்த்திக்கும் திருக்கோயில்களும் உண்டு. அம்மன் ஆலயங்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. ஸ்ரீ விநாயகப்பெருமானுக்கும் ஸ்ரீமுருகவேளுக்கும், ஸ்ரீவைரவசுவாமிக்கும் திருக்கோயில்கள் உள்ளன. அருளும்த திருவும் நிறை ஊரில் பேரருளை ஊற்றாய் சுரந்து பொறையின் நிலமாக,நறையின் சுவையாக அனைவரையும் ஈர்த்து அரவணைத்து காத்து நிற்கும் காளி காதேவிக்கு இன்றுதேர்.

மகோற்சவப் பெருந்திருவிழா வில் உன்னதமான தேர் விழாப் பொலிவு கண்டு நிற்கும் அன்னை யின் திருவாலயம் இரண்டு நூறு வருடங்கள் பழமை வாய்ந்தது. திருக்கோயிலை ஆக்கி அளித்த நம் முன்னவர்கள் திரிசூலத்தை காளியாக வைத்து மர நிழலைக் கூரையாகக் கொண்டு கோயிலைக் கட்டினர். உள்ளுறை இறை யைக் கண்டனர். சொரியும் திருவரு ளைப் பெற்றனர். காளியம்பாள் அருளாட்சி பெருக. அற்புதங்கள் பெருக கோயிலும் வளர்ந்தது. ஊரும் வளர்ந் தது. அம் மையின் திருவருட்கடாச்சம் கைகூட பின்னவர் கற்கோயில் அமைத் தனர். சதுர்வேதமும் ஆறுவகைச் சாத்திரமும் பல தந்திர பிராணங்களை சாற்றி நிற்கும் ஆகம விதிப்படி அமைத்த ஆலயத்துக்கும் ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து ஒன்பதாம் ஆண்டு ஆனித்திங்கள் எட்டாம் நாள் மகாகும்பாபிஷேகத்தை விண்ணவர் பூச்சொரிய மண்ணவர் மனம் களிக்க வெகு சிறப்பாக நிறைவேற்றி இறையருளை இறைஞ்சி நின்றனர். ஆண்டுகள் தோறும் அலங்கார திருவிழா அழகு கண்டு அருளைப் பெற்றதோடு விடாது இந்துப் பெருமக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ள பண்டிகைப் பெருநாள்களும் காளியம் மனுக்குரிய திருநாள் தினங்களும் கோலாகலமாக திருவிழாவை நிறைவேற்றி திருவீதி உலா வரும் திருக்கோலக்காட்சியை கண்டு அம்பாளை தரிசித்து புண்ணியம் பெற்றனர்.

பங்குனி மாத் திங்கள் வாரம் அம்மனுக்கே உரிய சிறந்த தினங்களாகும் நேர்த்தியும் , குளிர்த்தியும் பொங்கலும் படையலும் அம்மன் திருத்தலங்கள் தோறும் விசேட நிகழ்வுகளாகும் அத்தகைய பங்குனித்திங்களின் ஒருநாள் ஸ்ரீகாளிகாதேவிக்கும் பூசை நடைபெற்ற வேளை கூடி நின்ற பக்தர் கள் மெய்சிலிர்த்து பூங்கு வளைக் கண்ணியை நண்ணி புண்ணியம் செய்மனத் தோடு நின்ற வேளை வெள்ளி அரவுருவில் அன்னைவெளிப் பட்டு காட்சி கொடுத்த அற்புதத்தை மெச்சி விழிநீர் பெருக்கி, உள்ளத்துள் அன்பை பெருக்கி,புல்லரித்த மேனியராய் தம்மை மறந்து தம் நாமத்தையும் மறந்து நின்ற னர். அற்புதமான காட்சி ஆனால் உண்மை. "ஆயிரத்தி தொளாயிரத்தி தொண்ணூற்றி நான்காம் ஆண்டு பங்குனி மாத திங்கள் வாரத்தில் தூய வெள்ளி நிற சர்ப்பம் வைரவர் ஆலய மேல்பண்டிகையில் தோன்றி காளியுறை கருவறையைநோக்கிய வண்ணம் நின்றது.வெகு நேர்மாகக் காட்சி தந்த அரவைக் கண்ணுற்ற பக்தர்கள் "என்புனைந்துருகி நெக்கு நெக்கேங்கி அன்பெனும் ஆறு கரையது புரள நன்புல னொன்றி நாயகி என்றரற்றி உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்ப கரமலர் ஒட்டி இருதயம் மலர கண்களிசுவர" என்றோதும் திருவாசகச் செய்யுளுக்கு ஒப்ப நின்றனர். ஆலயக் குருக்கள் பொங்கல் , பழம்,பால்படைத்து தீபாராதனை செய்து எல்லாரையும்வழிபடச் செய்தார். அரவும் மறைந்தது ஸ்ரீகாளியம்மன் மகிமையும் உயர்ந்தது.

மகா காளியின் கருணை மழை பொழிய அறங்காவலர் சபைக்கு அன்னையை தேரில் ஆரோ கணித்திருக்கும் அருங்காட்சியை காணும் அவா ஊற்றாய் உருவெடுத்தது.அந்தப் பேராசை அம்மையின் பேரருளால் சித்தியானது. அவர்கள் எண்ணமும் ஈடேறியது . அழகிய சித்திரத் தேரும் வந்தது. ஆயிரத்தி தொளாயிரத்தி தொண்ணூற்றி நான்காம் ஆண்டு ஆனித்திங்கள் பத்தாம் நாள் சுப வேளையில் சுந் தரத் திருமுகம்பொழியும்கருணையோடு ஸ்ரீ காளிகாதேவி ஆரோகணித்திருக்க மாது சிரோன் மணிகளும வடம்பிடித்திழுக்க அரோகராகோஷம்வானை முட்டமூவரும தேவரும்மாயா முனிவரும மலர் தூவ திருத்தேர் அம்பாளின் திருவீதியில் உலாவந்தது. அம்பாள் அனுக்கிரகமும் கைகூடியது. பக்தர்களும் புண்ணியம் பெற்றனர். தற்போது மஹோற்சவப் பெருந்திருவிழா ஆடிப்பூரத்தை தீர்த்த உற்சவமாகக் கொண்டு வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அறங்காவல் சபையினரின் மேலானநெறியாள் கையில் மேலும் மேலும் வளர்ச்சியை கண்டு நிற்பது பெருமைக்குரியதே.

அற்புதங்கள், அருளாட்சி நிறைந்த எங்கள்தாய் அன்பே வடிவானவள். அள்ள ,அள்ள குறையாத அருளைச்சுரந்து நிற்கும் தெய்வம் தாயின் திருவருள் கை கூட பெற்றாரும் ,தரிசனம கண்டாரும் சொப்பனத்தில தொழுதாரும் கூறும் அம்பாளின்திரு லீலைகள் அளவில் கவலை தீர வேண்டி வழி கேட்டு விழிநீர் பெருக ஸ்ரீ காளியம்மையை வழிபட்ட பலர் பழி பாவம் நீங்கப்பெற்றார், பலர் அன்னையின் அருள் நோக்கினால் காரியங்கள் கைகூடப் பெற்று வாழ்வில் உய்தி பெற்று நிற்கும் உளவர்கள் [illegible] புலம பெயர்ந்து கடல் கடந்து சீதளவலய நாடுகளில் வசிக்கும் அன்பர்களும் மேன்மை நிலையெய்தி இன்றும் பொருள் ஈய்ந்து அன்னை தெய்வத்தின் கருணையை, கடாட்சத்தை வேண்டி நிற்கின்றனர். அதனால் மெய்யடியாரின் திருத்தொண்டினால் அறங்காவல்சபையினரின் தளராத சேவையினால் இன்றும் திருப்பணி வேலை தொடர்ந்த வண்ணமே உள்ளது, தாயின் கிருபையே.

இத் திருப்பதியை ஒரு குடும் ப வழித் தோன்றல்களே செம்மையுற நெறிப்படுத்தி பரிபாலன ம் செய்கின்றனர். பயபக்தியோடு பணிவோடு வம்சா வழியினர் வழி நடத்திய போதும் ஆலயத்தை சாராத பிற அன்பர்களும் திருப்பணி வேலைகளிலும் மஹோற்சவ பெருவிழாவிலும் பங்கேற்று உபயகாரர் களாக வழி பாடியற்றி வருகின்றமையும் விசேட திருநாள் தினங்களையும் உபயமாக செய்து பணிந்தேத்துவதும் பெருஞ் சிறப்பே.எல்லோரும்போற்றும தெய்வமாக விரும்பி வணங்கும் ஓர் ஆலயமாக கிராமப்புறம் ஒன்றில் விளங்குவது எங்கள் தாயின் பெருங்கருணையே!"

மலரமைப்பு:
அறங்காவலர்
சபை

திருமணப் பட்டுப்புடவை, மெச்சிங் பிளவ்ஸ்,
பட்டுவேட்டி, ஸ்கேட், சுரிதார்,சேட் சிறுவர் உடை
ஆகியவற்றை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
V.S விஜய் சில்க்
123, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.

நியூட்டன் அக்கடமி
கோண்டாவில்
தரம் 1 - A/L வரை சகல வகுப்புக்க ளும்
Super Grade ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப் படுகின்றது. O/L மாணவர்களுக்கான பேப்பர் கிளாஸ் ஆரம்பம் 9.08.2008 Sat-12p.m
அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

ஓடர் நகைகள் சிறந்த முறையில்
அமைத்துத்தர
ஸ்ரீ மதனா நகை மாளிகை
தங்கப் பவுண் நகைவியாபாரம்
155/m கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 2227772

மருந்துவகைகள், உர வகைகள் விதை தானியங் கள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆ.இராசேந்திரம்
கமக்கார மாளிகை
கே.கே.எஸ்.றோட், இணுவில்.

ம.ஜேந்திரன்
கோண்டாவில் கிழக்கு.

க.கனகசிங்கம்
ஆதிபராசக்தி பந்தல் சேவை
சென் செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

மு.அருமைநாயகம்
சிவஞானம் ஒட்டோ & ஒலி ஒளி சேவை
ஆஸ்பத்திரி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

சகல விதமான தச்சு
வேலைகளுக்கும் நாட வேண்டிய இடம்
PROP க.கதீஸ
செல்வம் தச்சுத்தொழிலகம்
ஆலடி வீதி , கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

# ஓயாத அலைகளாக இன்றுவரை உறுமும் ஒரே அமைப்பு விடுதலைப் புலிகளே

## ஆனந்த விகடன் புகழாரம்

ஈழ விடுதலைக்காக இலங்கை அரசுக்கு எதிராக எத்தனையோ இயக்கங்கள் எழுந்து விழுந்துவிட்டன. ஓயாத அலைகளாக இன்று வரை உலக அரங்கத்தில் உறுமிக் கொண்டு இருக்கின்ற ஒரே அமைப்பு 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்றும் ஏங்கிக் கிடக்கும் ஈழ மக்களின் ஒரே நம்பிக்கையும் புலிகள்தான் என்றும் தமிழ் நாட்டின் முன்னணி வார ஏடான 'ஆனந்த விகடன்' புகழாரம் சூட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக ஆனந்த விகடன் இதழானது (06.08.2008 பதிப்பு) 'கருத்துக்கணிப்பு' ஒன்றை வெளியிட்டு பிரசுரித்துள்ள கட்டுரை,

ஜூலை 25, 1983...! இலங்கையில் இனவெறிக்கான வெறுப்பு விதை அழுத்தமாக விழுந்த நாள். சிங்கள இராணுவம் முதல் முறையாக ஈழத் தமிழ்ப் பகுதிகளில் வெறிபிடித்து வேட்டையாடி, அப்பாவித் தமிழர் பிணங்களை அடுக்கிய நாள். தனித் தமிழீழப் போராட்டத்துக்கு உணர்ச்சி நெருப்பேற்றிய அந்தக் கறுப்பு ஜூலை முடிந்து 25 வருடங்களாகின்றன!

அரை நூற்றாண்டு காலமாக போரின் இரத்தத்தில் நனைகிறது ஈழ மண். நிலம், குடும்பம், உயிர், உடைமை என எல்லாவற்றையும் இழந்து துயரத்தின் பிள்ளைகளாக வாழ்கிறார்கள் ஈழத் தமிழர்கள். ஈழ விடுதலைக்காக, இலங்கை அரசுக்கு எதிராக எத்தனையோ இயக்கங்கள் எழுந்து விழுந்து விட்டன. ஓயாத அலைகளாக இன்று வரை உலக அரங்கத்தில் உறுமிக் கொண்டு இருக்கிற ஒரே அமைப்பு, 'தமிழீழ விடுதலைப் புலிகள்'!

அனைத்துலக தீவிரவாத அமைப்புக்களின் பட்டியலில் ஒன்றாக இருந்தாலும், உலகில் வேறு எந்த இயக்கத்துக்கும் இல்லாத கண்ணிய மரியாதை விடுதலைப் புலிகளுக்கு உண்டு. உலக நாடுகளின் துணையோடு எதிர்க்கிற இலங்கை இராணுவத்துக்கு. புலிகள் ஒவ்வொரு கணமும் சிம்ம சொப்பனம்தான்!

'இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களை மீளஇணைக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளோம். புலிகளை வீழ்த்த இன்னும் 10ஆயிரம் வீரர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள்!' என்று அறிவிக்கிறது இலங்கை பாதுகாப்பு அமைச்சகம். அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் பராக் ஒபாமா, உலகின் மற்ற தீவிரவாத அமைப்புக்களைக் கண்டிக்கிறார். ஆனால், புலிகள் பற்றிய கேள்விகளுக்கு அவரது பதில் மௌனம் தான். 'ஷெல்லடிக்கிற இரவுகளும் எங்கட பெண்டு பிள்ளைகளைக் கைபிடிச்சு இழுக்கிற ஆமிக்காரர்களும் இல்லாத எங்கட மண் வேண்டும்' என ஏங்கிக்கிடக்கும் ஈழ மக்களின் ஒரே நம்பிக்கையும் புலிகள்தான்!

ஆனால், புலிகள் அமைப்பு பலவீனமடைந்து விட்டது, அமைப்புக்குள்ளேயும் உலக நாடுகளின் பார்வையிலும் அது பின்னடைவில் இருக்கிறது என்பது மாதிரியான தோற்றம் இப்போது ஏற்பட்டிருப்பது உண்மையா..? அன்டன் பாலசிங்கம், சுப.தமிழ்ச்செல்வன் போன்ற முக்கிய தளகர்த்தர்களின் மறைவு அவர்களுக்கு மறுக்க முடியாத இழப்புதான். ஆனால், 'விடுதலைப் புலிகளுக்கு இழப்புகள் புதிதல்ல. திலீபன் தொடங்கி தமிழ்ச்செல்வன் வரை அவர்கள் இழப்புக்களில்தான் எழுந்து முளைத்திருக்கிறார்கள். 25வருட போராட்டக் களத்தில் புலிகள் கண்ட இழப்புக்கள் நிகழ்காலச் சரித்திரத்தில் எந்த போராளிக்குழுக்களும் காணாதது. அவர்களை எதுவும் தடுக்க முடியாது' என்கிறார்கள் அனைத்துலக பார்வையாளர்கள். புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பகுதிகளில் இராணுவம் முன்னேறி வருகிறது என இலங்கை அமைச்சகம் வெளியிடும் செய்திகளில் எத்தனை உண்மை என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இந்தச் சூழலில் இலங்கையில் நடக்கும் சார்க் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வதை அடுத்து தற்காலிகப் போர் நிறுத்தம் அறிவித்திருக்கிறார்கள் புலிகள். இந்த நேரத்தில் எல்லோருக்குள்ளும் எழுகிற கேள்விகள்.... இலங்கை தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் நிலைப்பாடு சரிதானா? புலிகளின்

## அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் பராக் ஒபாமா புலிகளை கண்டிக்கவில்லை

போராட்டத்துக்குத் தமிழர்களிடையே ஆதரவு இருக்கிறதா....? தமிழீழம் அவசியமா? ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பிரபாகரனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமா?

'ஒற்றைத் துப்பாக்கி, ஐந்து வீரர்களோடு பிரபாகரன் தொடக்கிய அமைப்பு. இன்று 25 ஆயிரம் வீரர்கள் கொண்ட மாபெரும் இயக்கம்! தரைப் புலிகள், கடற் புலிகள், வான் புலிகள் என சகல திசைகளிலும் கிளை பரப்பும் புலிகளின் இராணுவக் கட்டமைப்பு அசாத்தியக் கச்சிதமானது. இதுவரை புலிகள் தற்காப்பு நிலையில்தான் போரிட்டார்கள். அவர்கள் தாக்குதல் நிலையை எடுக்கும்போது சிங்கள இராணுவம் பெரும் வீழ்ச்சியைச் சந்திக்கும். அந்தத் தருணத்துக்காகத்தான் புலிகள் காத்திருக்கின்றார்கள்!' என்கிறார் ஈழத்துக் கவிஞர் காசி ஆனந்தன் நம்பிக்கையாக!

புலிகளின் நிரந்தர ஆதரவாளரான தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன், 'போர் தந்திரங்களின்படி சில இடங்களில் முன்னேறி, சில இடங்களில் பின் வாங்கினாலும் புலிகள் தங்கள் இலக்கை நோக்கி முன்னேறிக்கொண்டே இருக்கிறார்கள். உலக நாடுகளிடமிருந்து ஆயுத உதவி பெறும் சிங்கள இராணுவத்திடம் பறித்தெடுத்த ஆயுதங்களைக் கொண்டே இத்தனை காலமும் வளமான போராட்டம் நடத்தி வருகின்றார்கள் புலிகள்!' என்கிறார்.

'தமிழீழப் போராளிகளின் ஆயுதம் தாங்கிய போராட்டம் அறிவியல் பூர்வமாகவும் இராணுவ ரீதியாகவும் பெரும் வெற்றியைச் சந்தித்திருக்கிறது. அனைத்துலக அளவில் தமிழீழம் அங்கீகரிக்கப்படவில்லையே தவிர, இலங்கையில் தமிழீழத்தை மனதளவில் ஏற்றுக்கொண்டார்கள் என்பதே உண்மை. தமிழீழத்துக்கான அரசாங்கம் அமைக்கப்பட்டு, நீதி, காவல், கல்வி, மருத்துவம், நிதி என அனைத்துத்துறைகளும் சிறப்பாக இயங்கி வருகின்றன. இலங்கை சார்க் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்வதை ஒட்டி, புலிகள் அறிவித்திருக்கும் போர் நிறுத்தம் புலிகளின் நேர்மையை உலகுக்குக் காட்டுவதாக இருக்கிறது!' என்று பெருமிதப்படுகிறார் தொல். திருமாவளவன்.

'ஏழு, எட்டு வயசுப் பசங்களை எல்லாம் தீவிரவாதிகளாக மாத்துறதுதான் ஒரு இயக்கத்தின் கொள்கையா இருந்தா, அப்படி ஒரு இயக்கம் எதுக்கு? தமிழ்நாட்டில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் இங்கே இருந்து தான் தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கடத்துறாங்க புலிகள். இதனால் தமிழகத்துக்கு எப்பவும் பாதிப்புத்தான். இப்போ இலங்கைப் பிரச்சினையில் இந்தியா எடுத்திருக்கும் நிலைப்பாடுதான் சரி. தனி ஈழம் சரியான தீர்வு இல்லை' என்று காரசாரமான விமர்சனத்தைப் புலிகள் மீது வைக்கிறார் சோ.

பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் க.இராசேந்திரனோ 'ஒவ்வொரு முறை சமரச உடன்படிக்கை ஏற்படும்போதும் இலங்கை அரசுதான் அதை மீறிச் செயற்பட்டு இருக்கிறது. தமிழ் மக்களுக்குச் சம உரிமை வழங்குகிறோம் என்று அறிவித்துவிட்டு. ஒரே வாரத்தில் கொடுத்த வாக்குறுதியைக் குப்பையில்தான் இலங்கை அரசு போடும். இதற்கு தனி ஈழம் அமைவது ஒன்றுதான் இறுதித் தீர்வாக அமையும்' என்கிறார் ஆவேசமாக.

'இதுவரை பாகிஸ்தான் உட்பட அசாதாரணச் சூழ்நிலை நிலவும் பல அண்டை நாடுகளில் எல்லாம் சார்க் மாநாடுகள் நடந்திருக்கின்றன. அப்போதெல்லாம் மூன்று கப்பல்களில் ஆயுதங்களும் 3 ஆயிரம் போர் வீரர்களும் பிரதமரின் பாதுகாப்புக்கு என்று போனதில்லை. இப்போதுதான் இந்த வேடிக்கை நடக்கிறது.



இலங்கையைத் திருப்திப்படுத்தும் வேலையை மட்டுமே செய்து வருகிறது இந்திய அரசு. இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் வேலைபார்த்த பல லட்சம் இந்தியத் தமிழர்களை ஒன்றுமில்லாத, பிச்சைக்காரர்களாகத் திரும்பப்பெற்றது, கச்சதீவை விட்டுக் கொடுத்தது, அதன் பலனாக இன்றும் தமிழக மீனவர்களைப் பலி கொடுப்பது வரை இது தொடர்கிறது.

இந்தியாவின் பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் நாடுகளுடன் இலங்கை உறவு வைத்துக்கொள்ளாது என்று நினைக்கிறது இந்திய அரசு. ஆனால், பாகிஸ்தானிய வானோடிகள்தான் சிங்களப் போர் வானூர்திகளை இயக்கிக்கொண்டு இருக்கிறார்கள். அமெரிக்காவும் தன் இராணுவ தளத்தை இலங்கையில் அமைப்பதற்கு நேரம் பார்த்து விட்டது. இதெல்லாம் தெரிந்தும் நம் டெல்லி அறிவுஜீவிகள் இப்படி இருக்கிறார்கள்!' என்று காட்டமாகிறார் பழ. நெடுமாறன்.

இந்தச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும்? எத்தனை விமர்சனங்கள் இருந்தாலும்இயக்கத்தைக் கட்டுக்கோப்போடு முன்னெடுத்துச் செல்வதில் தீவிரமாக இருக்கிறார் பிரபாகரன் என்பதுதான் அரசியல் நோக்கர்களின் கருத்து. 'பிரபாகரனின் சிந்தனைதான் விடுதலைப் புலிகளின் சிந்தனை. கட்டுக்கோப்புடனும் தலைமைக்கு விசுவாசமாகவும் இருக்கும் விடுதலை இயக்கத்துக்குச் சிறந்த உதாரணமாக இருக்கின்றது புலிகள் அமைப்பு. பிரபாகரன், திறமையான இராணுவத் திட்ட வகுப்பாளர் மட்டுமல்ல அரசியல் நுணுக்கமும் அறிந்தவர். மாறுகின்ற உலக நடப்புகள் எப்படியெல்லாம் தமிழர்களின் போராட்டத்தைப் பாதிக்கும் என்பதில் தீர்க்கமான ஞானம் உள்ளவர். ஆட்சி மாற்றம் ஏற்படவுள்ள அமெரிக்கா, இந்திய நிலைமைகள் தெரிந்த பின்பு, அடுத்த நகர்வை நோக்கிய முக்கியமான முடிபை பிரபாகரன் எடுப்பார்'-சமீபத்தில் இலங்கை இணையத்தளப் பேட்டியில் இப்படிச் சொல்லியிருக்கிறார் இந்தியப் பத்திரிகையாளர் அனிதா பிரதாப்.

சரி... தமிழக மக்கள் என்ன சொல்கிறார்கள்...? தனி ஈழம், விடுதலைப் புலிகள் விடயத்தில் அவர்கள் மனநிலை என்ன என அறிந்து கொள்ள தமிழகம் முழுவதும் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தியது விகடன்.

முடிபுகள், தமிழக மக்களின் மனசாட்சியை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. ஈழ மண்ணில் அமைதி மலர வேண்டும், விடுதலை வெளிச்சம் பரவவேண்டும் என்பதே அது! என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாடு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
குறிப்பு:- அனுப்பப்படும் ஒவ்வொரு பொதிகளிற்கும் காப்புறுதி உண்டு

வெளிநாட்டில் உள்ளவர்களுடன் முகம் பார்த்து கதைப்பதற்கேற்ப நவீன வசதிகளுடனும்
வெளிநாடுகளுக்கு 7/=
இந்தியா 10/=
ஐக்கிய அரபு நாடுகளுக்கு 35/=
Internet Browsing
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி. (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக) யாழ்ப்பாணம்
46, ஆடியபாதம் வீதி திருநெல்வேலி (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக) யாழ்ப்பாணம்

## வெள்ளாங்குளத்தை மீட்ட...

ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டிருப்பதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் கூறியிருக்கின்றது.

கேந்திர முக்கியத்துவம் மிக்க மல்லாவி மற்றும் துணுக்காய் நகரங்களை நோக்கி இராணுவத்தின் 57 ஆம் படைப்பிரிவினர் நகர்ந்த போது நூற்றுக் கணக்கான மோட்டார்க் குண்டுகளை விடுதலைப்புலிகள் ஏவியதாகவும் எனினும் நிலைமையைப் படையினர் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

மாங்குளத்திற்கு மேற்கே வவுனிக்குளம், பாலையடிப் பகுதியில் மல்லாவியை நோக்கி மூன்று முனைகளில் நேற்று முன்தினம் காலை முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்துத் தாங்கள் நடத்திய தாக்குதல்களில் 30 படையினர் கொல்லப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்திருக்கின்றார்கள்.

இதேவேளை வெள்ளாங்குளம் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் 10 விடுதலைப்புலிகளும் 2 இராணுவத்தினரும் கொல்லப்பட்டிருப்பதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் தெரிவித்திருக்கின்றது.

அத்துடன் வவுனியா பாலமோட்டை மற்றும் வெலி ஓயாப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெவ்வேறு மோதல் சம்பவங்களில் மேலும் 17 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தக்வல் மையம் கூறியிருக்கின்றது.

எனினும் இது குறித்து விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ந-5)

## தெற்காசிய நாடுகளுக்கு...

முன்னெடுத்திருக்கும் நடவ டிக்கைகள் தொடர்பாகச் சுட்டிக்காட்டியிருந் தார்.

பிராந்தியத்தில் சமாதானத்தையும் பாதுகாப்பையும் வலுப்படுத்துவதற்கு இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம் எனக் குறிப்பிட்ட அவர், தெற்காசிய நாடுகளுக்குப் பயங்கரவாதம் ஒரு சாபக்கேடாக அமைந்துள்ளதுடன் அமைதிக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது எனக் கூறினார்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்குப் பிராந்திய நாடுகள் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய்வது முக்கியமானது என வலியுறுத்தியிருந்தார்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலிருந்து பயங்கரவாதத்தை இல்லாதொழித்துத் தற்பொழுது அங்கு ஜனநாயகத்தை அமுல்படுத்தியிருப்பதாகவும் பயங்கரவாதத்தில் ஈடுபட்டவர்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பி விட்டார்கள்.

முன்னாள் சிறுவர் போராளியாக இருந்தவர் தற்போது கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராகத் தேர்தெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ, இதுபோன்று வடக்கையும் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டு அங்குள்ள மக்களும் ஜனநாயகத்தை அனுபவிப்தற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.

ஆசியாவின் பொருளாதாரமே உலகின் பலமாகவுள்ள பொருளாதாரம் என தனது உரையில் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி; உணவுப் பாதுகாப்பு, சமூக முயற்சிகள் என்பனவே பொருளாதாரத்தைப் பலமாக வைத்திருப்பதற்கு உதவியதாகவும் இந்த ஸ்திரமான நிலைமை தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் சார்க் பிராந்திய நாடுகளுக்கிடையில் சக்தி எரிபொருள், தொலைத்தொடர்பு போன்ற விடயங்களில் இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டு அவற்றைப் பிராந்திய நாடுகளுக்கிடையில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என ஆலோசனை முன்வைப்பதாகவும் அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார். (ந-5)

## இந்திய...

மர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சார்க் மாநாட்டில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காபூலில் இந்தியத் தூதரகம் மீதான தாக்குதல் மற்றும் இந்திய நகரங்களில் அண்மையில் நடந்த தொடர் குண்டுத் தாக்குதல்கள் ஆகியவற்றைக் கண்டித்ததுடன் பிராந்தியத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் உறுப்பு நாடுகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

காபூல் தாக்குதலைப் பாகிஸ்தானியப் பிரதமர் யூசுப் ரசாக் கிலானி அவர்களும் வன்மையாகக் கண்டித்தார். இதேவேளை நேற்று கொழும்பில் இரு தலைவர்களும் இரு தரப்புப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின்போது காபூல் குண்டுத் தாக்குதல் குறித்த புலன் விசாரணைகளைப் பாகிஸ்தான் நடத்தும் என்று பாகிஸ்தான் பிரதமர் உறுதியளித்துள்ளதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ சங்கர் மேனன் தெரிவித்துள்ளார். (ந-5)

## எதிர்க்...

வரிசையில் அமர்ந்திருந்த சபாநாயகர் வி. ஜே.மு.லொக்கு பண்டார, இது குறித்து அங்கிருந்த சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தனவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

சபாநாயகர் லொக்கு பண்டாரவும் சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தனவும் எதிர்க் கட்சித் தலைவர் அமர்ந்திருந்த 4-வது வரிசைக்குச் சென்று அவரை அழைத்து வந்து அமைச்சர்களும் அவர்களின் பாரியார்களும் அமரும் முதல் வரிசையில் அமர வைத்தனர்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமர்ந்திருந்த முதல் வரிசையிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் அமர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## 13 ஆவது திருத்தச் சட்ட மூலம்...

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினர் நேற்று மாலை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இச் சந்திப்பு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இனப்பிரச்சினை தொடர்பாகவும் அதற்கான முனைப்புக்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இச் சந்திப்பின் போது கருத்துரைத்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்,

இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்காக அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சிக் குழுவின் பல விடயங்கள் இணக்கத்துக்கு வந்துள்ளன. எனவே அதனை முன்கொண்டு சென்று அதன் மூலம் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதால் இதற்கு இந்தியா தனது முழு ஊக்கத்தையும் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

இதன்போது தமது கருத்தை முன்வைத்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், 13ஆவது திருத்தச் சட்டம் என்பது ஒரு தற்காலிக ஏற்பாடாகவே இருக்க முடியும். உண்மையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று காணப்படும் தீர்வாக இருக்க வேண்டும்.

அதாவது 13 ஆவது திருத்தச் சட்டம் பிளஸ் என குறிப்பிட்டார். இதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுக்கு இடமில்லை. அரசியல் தீர்வே காணப் பட வேண்டும் என இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் நேற்று முன்தினம் வெளியிட்டிருந்த கருத்தை வரவேற்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினர் இதன்போது தெரிவித்தனர்.

இதனைத் தவிர இந்திய வம்சாவழி இலங்கைத் தமிழ்மக்களின் நலன்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக இந்திய வம்சாவழி மக்களின் கல்வி, சுகாதாரம், தொழில்துறை போன்ற விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ந-5)




# இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்து இழந்த இடங்களை மீட்பது பெரிதல்ல

## மனித உரிமைகளை காப்பதே முக்கியம் – அமெரிக்கா

விடுதலைப்புலிகளிடமிருந்து இலங்கை பயங்கரவாத அச்சுறுத் தல்களை எதிர்நோக்கியுள்ளது என்பதை அமெரிக்கா அறிந்துள்ள போதும் சாதாரண மக்களையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெற்காசியப் பிராந்தியங்களுக்கான அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் றிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இருக்கும் அச்சுறுத்தலை நாங்கள் அறிவோம். பயங்கரவாதத்திற்கு எதிராக நாங்கள் போராட வேண்டும். எனினும் இலங்கையின் ஜனநாயகம் மற்றும் இலங்கை மக்கள் அனைவரினதும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் கூறியுள்ளார்.

இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் ஜனநாயக உரிமைகளையும் அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிகளையும் மக்கள் அனுபவிக்க வேண்டும். மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பது தொடர்பாக நாங்கள் இலங்கை அரசாங்கத்துடனும் இலங்கை மக்களுடனும் இணைந்து செயற்படுகின்றோம் என பௌச்சர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் முழுமையாக முன்னெடுக்கப்பட்டு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் எந்தவிதமான பாரபட்சமும் பார்க்காமல் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார் பௌச்சர். (ந-5)

## 10 ஆயிரம்...

பிரதேசங்களிலிருந்து ஆயிரத்து 500 குடும்பங்களும் கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குக் கரையோரப் பகுதிகளிலிருந்து ஆயிரத்து 550 குடும்பங்களுமாக பத்தாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தஞ்சமடைந்துள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வட மேற்கேயுள்ள பூநகரி பிரதேச செயலகப் பகுதியிலிருந்து மக்கள் ஏறக்குறைய அனைவருமே பாதுகாப்பான இடங்களைத் தேடி இடம்பெயர்ந்துள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கின்றார். (ந-1)

## தமிழக...

மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்துப் பிரதமர் கவலை தெரிவித்தார். கடல் எல்லையை மீறும் மீனவர்கள் மீது துப்பாக்கியால் சுடுவது போன்ற கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டதாகத் தெரிகின்றது.

1974 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஒப்பந்தத்தின்படி தமிழக மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். (ந-5)

## பிரதமர்...

குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கலந்துரையாடவிருந்ததாக கருணா அம்மான் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியப் பிரதமர் தம்மைச் சந்திக்காமை குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்குக் கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளதாகவும் கருணா தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பு கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலிலும் மாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர்,

தாம் முக்கியமானதொரு அரசியல் கட்சியினர் எனவும் இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கான தகுதி தமக்கு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் ஆதரவுக் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியப் பிரதமரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் கருணா இங்கு சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

வலம்புரி நடத்தும்
5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை-
மாணவர்களுக்கான கருத்தரங்கு

முற்றிலும் இலவசம்

வடமராட்சி கல்வி வலயத்துடன் இணைந்து
PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE
மக்கள் வங்கியின்
அனுசரணையுடன் நடைபெறும் கருத்தரங்கு
காலம் :-03.08.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு
இடம்:- பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி

வலிகாமம் கல்வி வலயத்துடன் இணைந்து
ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின்
Sri Lanka Insurance
அனுசரணையுடன் நடைபெறும் கருத்தரங்கு
காலம்:- 03.08.2008 ஞாயிறு காலை 9 மணி
இடம் :- மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி
இக் கருத்தரங்கில் மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுக.
ஏனைய கல்வி வலயங்களிலும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான கருத்தரங்குகள் நடைபெறும் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.